விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 21 வியாழக்கிழமை (03.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 46

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# 57 - வது சுதந்திர தினம் நாளை

# இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க அழைப்பு

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழரது சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காது அவர்களது தேசிய நலன்களை புறந்தள்ளிவிட்டு இலங்கை அரசு சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நடத்த முற்படுவது கேலிக்குரியது. இலங்கையின் சுதந்திர நாள் தமிழினத்துக்கு கரிநாளாகும்.

எனவே நாளைய சுதந்திர தினத்தை வழமைபோல் தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். இந் நாளைக் கறுப்பு நாளாக அனுஷ்டித்து தமிழ்மக்கள் தமது எதிர்ப்பை துக்க தினமாக வெளிக்காட்ட வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பாக ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ப. கனகலிங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

(௨ ஆம் பக்கம் பார்க்க)

## நடேசனுடன் யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் பேச்சு

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசனை யூ.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினர். நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறை நடுவப்பணியகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது. யூ.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் சார்பாக ஜேம்ஸ்ன் லெபன்ஸ், அனிசெட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வகுப்பறைக் கூரை பொறிந்தது 15 மாணவர்கள் படுகாயம்

### சுதுமலை சிந்மய வித்தியாலயத்தில் நேற்றுச் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

சுதுமலை சிந்மய வித்தியாலயத்தின் ஆரம்பப் பாடசாலை வகுப்பறைக் கூரை வீழ்ந்ததில் அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த 15 மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் காயமடைந்த 9 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இ.வியாசான் (வயது 10), யோ. நிதர்சன் (வயது 10), ஆர். தேனுஜா (வயது

## 'சுனாமி 81' ஐ அடையாளம் காண மரபணு பரிசோதனைக்கு உத்தரவு

### நீதிமன்றின் முன் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

ஆழிப்பேரலையில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டு தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையின் பராமரிப்பிலுள்ள 'சுனாமி 81' எனப் பெயரிடப்பட்டுள்ள 4 மாத ஆண் குழந்தைக்கு உரிமை கோரும் பெற்றோரை அடையாளம் காண்பதற்கு மரபணு பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## பில்கிளின்ரன் இலங்கை வருவார்

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகள

## பாப்பரசர் தேறிவருகிறார்

(வத்திக்கான்)

சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற 84 வயதான பரிசுத்த



போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இ.வியாசான் (வயது 10), யோ. நிதர் சன் (வயது 10), ஆர். தேனுஜா (வயது 8), க.பிரியசகீ (வயது 7), எம். ஜனகி (வயது 8), ப. பவித்ரா (வயது 8), எஸ். சிவரஞ்சினி (வயது 8), க. ஜெனுசா (வயது 8), செ. தினேசா (வயது 8) ஆகிய 9 பேருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா (12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் பாதிக் கப்பட்ட இலங்கையில் மேற்கொள் ளப்படும் புனரமைப்பு வேலைகள ஒழுங்குமுறையில் நடைபெறு வதை உறுதி செய்வதற்கென ஐ.நாவின் விசேட தூதுவராக முன் னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

(வத்திக்கான்)

சுகவீனம் காரணமாக வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டிருக்கின்ற 84 வயதான பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப் பர் சின்னப்பரின் உடல்நிலை தேறி வருவதாக அறிவிக்கப்படு கின்றது.

காய்ச்சல், மூட்டுவலி என்பன (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளியே நின்றுகொண்டு கருத்துக் கூறாமல் கூட்டத்தில் பங்குகொண்டு குறைகளை கூறுங்கள்

## இப்படிச் சொல்கிறார் ஆளுநர் டிரோன்

(வவுனியா)

தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் வெளியிலிருந்து கருத்துத் கூறுவதிலும் பார்க்க கூட்டங்களில் கலந்துகொண்டு தமது மக்களின் தேவையினை உரிமையோடு கேட்க முடியும் என வட கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

வட் மாகாண அரச அதிபர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ வுக்கும் இடையில் வவுனியா மாவட்டச் செயலகத் தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களிற்கென நிவாரண புனரமைப்பு வேலைத் திட்டங்கள் குறித்து நேற்றுக் கலந்துரையாடப்பட் டது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. வன்னி மாவட்ட புனர் வாழ்வு அபிவிருத்தி. அமைச்சர் றிசாட் பதியுதீன் கலந்துகொண்டார்.

கடந்த மாதம் முதல் வாரம் வவுனியாவிற்கு வருகை தந்த ஆளுநர் வடக்கே ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுடைய நிவாரண வேலைத்திட்டங்கள் பற்றி ஆராய்ந்தார். அதன் முன்னேற்ற அறிக்கை இன்றைய கலந்துரை யாடலின்போது (12 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சமாதானத்தை நிலைநாட்ட இதுவேதருணம்

# தவறின் சமாதானம் சமாதியாகும் அபாயம்

# பிரதமர் மகிந்தராஜபக்ஷ எச்சரிக்கை

சுனாமி இயற்கை அனர்த்தம் நாட்டில நிலையான சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுதிக் கொடுத்துள்ளது. இந்த வாய்ப்பை அரசாங்கம் தவறவிட்டால் சமாதாத்துக்கான சந்தர்ப்பம் சமாதியாகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.



அரசியல் விவகார அமைச்சில் இடம் பெற்ற கருததரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. தவிர்ந்த ஏனைய அரசியற் கட்சிகளின் பிரமுகர்களும் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கில் பிரதமர் மகிந்த ராஜபகஷ மேலும் கருத்துத தெரிவித்தபோது,

நாட்டில் சமாதானத்தை ஏறபடுத்துவதற்குரிய இறுதிச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. சுனாமியின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்பாக நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் நிலை காணப்பட்டது.

எனினும், சுனாமியின் பின்னர் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு நிலை ஏற்பட்டுள்ளது. இது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குரிய சூழ்நிலை. இதனை சரிவரப் பயன்படுத்தி நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் அழைப்பு விடுத்தார்.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியானது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விருப்பம் கொண்டிருப்பதாகவும், இந்த நிலையில் மீள்கட்டுமான பணிகளில் விடுதலைப் புலிகளும் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதேபோல் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் வகையில் அரசியல் அமைப்பு உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (ப)

# வேல்ட் விஷன் அதிகாரிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தின் மீள் கட்டுமானப் பணிகளின் அரசாங்கத் திட்டம் குறித்து ஜனாதிபதி வேல்ட்விஷன் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இடம்பெயர்ந்த அனைவருக்கும் குடிநீர், மின்சாரம், சுகாதார வசதிகள் உட்பட அடிப்படைத் தேவைகளை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரி சபை இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடு ஒன்றைக்கட்ட ஆகக் குறைந்தது 500 சதுர அடி நில்த்தை வழங்க ஏற்கனவே ஏற்பாடுகள் செய்து இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

வேல்ட் விஷனின் தேசிய பணிப்பாளர் யுகுவாளி தனது அமைப்பு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்ப 4 கோடி அமெரிக்க டொலர்களை செலவிடத்தயாராக உள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் 3 ஆயிரம் வீடுகளை வேல்ட் விஷன் கட்டிககொடுக்கும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். (ற)

## ஈ.பி.டி.பியினர் நிவாரண உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் வைத்து நிவாரணப் பொருட்கள் கடந்த மூனறு நாட்களாக வழங்கப்பட்டுவருகிறது.

நிவாரண அட்டை மூலம் பாய், பால் மா பக்கட, பெற்சிட், உலர் உணவுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டு வருகிறது.

மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு முன்னால் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. (ப-35)

## குடி நீர்விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள குடத்தனை, மணற்காடு ஆகிய கிராமங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு பருத்தித்துறைப் பிரதேசசபை, பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகியன பவுஸர் மூலம் குடிநீர் வழங்கிவருகிறது.

பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு சொந்தமான பவுஸர் வண்டிகளுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள வலிகாமம் பிரதேச சபைகள், திணைக்களங்களுக்கு சொந்தமான பவுஸர் வண்டிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. (ப-35)

## பொருட்கள் விசிறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி முகாமில் வைத்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மந்திகைச் சந்தியில் மக்களால் வீசப்பட்டன. இவ்வாறு வீசப்பட்ட பால், புடவைகள், உணவுப் பொருட்கள் என்பன அநாதரவாகக் காணப்படுகின்றது. (ச-101)

## இராசி பலன்

03.02.2005

(தை 21, வியாழக்கிழமை)

நவமி - பிற்பகல் 06.21 மணிவரை

விசாகம் - முற்பகல் 08.52 மணிவரை

இராகுகாலம் 02.05 - 3.35 மணிவரை

சுபநேரம் 08.05 -09.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், உறவினர் வெறுப்பு, பண விரயம், வாகன பயம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, தன லாபம், சௌக்கிய விருத்தி, போசன சுகம். |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், காரிய அனுகூலம், உடல் நலம். |
| கடகம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, வேலைச் சுமை. |
| சிங்கம் | ரோக பயம், அமைதிக் குறைவு, தொழில் சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | சகோதரர் உதவி, பிரயாண நன்மை, தனலாபம், முயற்சி கைகூடும். |
| துலாம் | மாதர் நட்பு, தனவிரயம், வீண் வார்த்தை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தெய்வ சிந்தை, பெரியோர் உதவி, முயற்சி கைகூடும், சயன சுகம். |
| தனுசு | சயனசுகக்குறைவு, பிரயாண அலைச்சல், சுபசெலவு, ஆரோக்கியக் குறைவு. |
| மகரம் | உஷ்ண நிலை, தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல வருமானம், கீர்த்தி. |
| கும்பம் | தொழில் விருத்தி, இஷ்ட சித்தி, நண்பர்கள் உதவி, அதிகாரம். |
| மீனம் | புதிய திட்டமிடல், ரோக பயம், பிதா சிந்தை, பண விரயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# துறைமுக அபிவிருத்திக்கு சீனா 1800 மில்லியன் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த மீன்பிடித்துறைமுகங்களைப் புனரமைப்பதற்கு என சீன அரசாங்கம் ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சருக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த இணக்கம காணப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள் நேற்று நிதியமைச்சில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி சங்வைக் கோவிற்கும், நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவிற்குமிடையே பரிமாறப்பட்டன.

சேதமடைந்த மீன்பிடித் துறைமுகங்களை புனரமைப்புச் செய்யும் செயற்றிட்டங்களைத் தயாரிக்க சீன அரசாங்கத்தின ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது.

நிர்மாணப் பணிகளுக்கான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்கவும் சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, இந்தச் செயற்றிட்டம் குறித்து ஆராய்ந்து பார்க்கவே சீனப் பிரதிநிதிகள் சிலர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தனர். (க-9).

## திருடப்பட்ட சைக்கிள் மீட்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்த 31 ஆம் திகதி களவாடப்பட்ட சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

சைக்கிளைத் திருடிய நபர், சைக்கிள் திருத்தும் கடையொன்றில் விற்பதற்கு பேரம் பேசிக்கொண்டிருந்தவேளை குறித்த சைக்கிளின் உரிமையாளர் அவ் வீதியினால் சென்ற சமயம் சைக்கிள் அடையாளம் காணப்பட்டு பிடிக்கப்பட்டது.

அதேவேளை, சைக்கிளைத் திருடிய நபர் சைக்கிளின் பெறுமதியை 3 ஆயிரத்து 500 ரூபா என்று விலை பேசியதாகவும், பின்னர் சடுதியாக 2 ஆயிரத்து 500 ரூபா எனப் பேரம் பேசியதாகவும், இதனால் சைக்கிள் கடைக்காரர் சந்தேகம் கொண்டு நேரம் தாழ்த்திய போதே சைக்கிளின் உரிமையாளர் அவ் வீதியால் சென்ற சமயம் சைக்கிள் வசமாகப்பிடிபட்டது. பிரஸ்தாபத் திருடன் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளளார். (ற-39)

## கிழக்கில் தொடரும் புலிகள் மீதான கெடுபிடிகளையடுத்து

# படையினர் போர் நிறுத்தத்தை மீறுவதாக குயிலின்பன் கண்காணிப்பு குழுவிடம் முறையீடு

(கல்முனை)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கைகளிலும், விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் வகையிலும் விசேட அதிரடிப் படையினர தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் முற்பகல் பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் மோட்டார் சைக்கிளில் ஆதரவாளரொருவருடன் பயணம் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மாவட்ட கடல் வளத் துறை பொறுப்பாளர் இலக்கியன் அறுகம்பைப் பாலத்திற்கு அருகாமையில் விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட கடல் வளத் துறைப் பொறுப்பாளர் இலக்கியன் தகவல தெரிவிக்கையில், குறிப்பிட்ட பாலத்திற்கு அருகிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் வேகக் கட்டுப்பாடு அறிவிததல் எமது பார்வைக்குத் தெரியவில்லை. வழமைபோல் அவ் வழியாக மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த சமயம் விசேட அதிரடிப்படையினர் அழைத்தனர். அங்கு சென்று எமது அடையாள அட்டையை காட்டிய போது அதனை வாங்கிப் பார்த்து விட்டு தாக்கினர். இதனை வெளியிட்டால் சுடுவேன் என்று என்னை எச்சரித்தனர் என்றார்.

இதேவேளை ஊரணி விசேட அதிரடிப்பட முகாம் வழியாகச் சென்று கொண்டிருந்த பெண் போராளிகள் வழி மறிக்கப்பட்டு இனிமேல் கறுப்பு பட்டி அனிந்து செல்லக் கூடாது என பெண் போராளிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் க.குயிலின்பன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புகார் செய்துள்ளார். (ப)







சுனாமி அனர்த்த நிவாரண பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் விவகாரம்;

# அரசிற்கும்- புலிகளுக்குமிடையில் இணக்கமின்மையால் வெளிநாட்டு உதவிகள் கைநழுவிப் போகும் அபாயம்

## ஐக்கிய தேசியக் கட்சியினர் எச்சரிக்கை

(கொழும்பு)

**சுனாமி நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இன்னமும் இணக்கம் ஏற்படாமையினால் நிவாரணத்துக்கான வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் உரிய திட்டமெதுவும் இல்லை என்றும், அரசாங்க நிவாரண உதவிகள் இன்னமும் உரியவகையில் மக்களை சென்றடையவில்லை என்றும் அக்கட்சி குற்றம்சாட்டியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் மாநாடொன்றினை நடத்திய ஐக்கிய தேசியக்கட்சி நடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரட்ண, பந்துல குணவர்தன, கபீர் ஹாசீம் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசாங்க நிவாரணம் உரிய முறையில் சென்றடையவில்லை. நிவாரணப்பணிக்கான பொதுக் கட்டமைப்பினை அரசாங்கமும் புலிகளும் இணைந்து உருவாக்க வேணடும் என்று உதவி வழங்கும் நாடுகள் கோரியுள்ளன.

நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் 7 சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற போதிலும் இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை. இதனால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்காது போகும் அபாய நிலை தோன்றியுள்ளது என்று இங்கு கருத்துத் தெரிவித்த நடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண, நிவாரணப் பணிக்கான பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படாவிட்டால் சுனாமி நிவாரணத்துக்கான மேலதிக உதவிகள் கிடைக்காது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும்? சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் புனரமைப்பு விடயம் தொடர்பாக அரசிடம் திட்ட மொன்றில்லை.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் இன்னமும் உரியமுறையில் கிடைக்கவில்லை. வாரம் ஒன்றுக்கு 365 ரூபா பெறுமதியான உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது.

இதில் வழங்கப்படுகின்ற அரிசியினை உண்ண முடியாத நிலை காணப்படுகின்றது. மா வழங்கப்படுவதில்லை. நிவாரண அரிசியினை சோறாக்க முடியாத நிலை உள்ளது.

குழந்தைகளால் இத்னை உண்ண முடியாது. சர்வதேச மற்றும் உள்நாட்டு சுயாதீன அமைப்புக்களின் உதவி மூலமாகவே மக்களுக்கு நிவாரணம் செல்கின்றது. தெண்பகுதியில் நிவாரணங்கள் உரியமுறையில் கிடைக்கவில்லையென்றால் கிழக்கில் இதனைவிட மோசமான நிலை காணப்படுகின்றது.

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் பகுதிக்குள் வீடுகளை அமைக்கக் கூடாதென்ற அரசாங்கத்தின் அறிவிப்பு தவறானது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசின் இத்திட்டத்திற்கு அமைச்சர்களான அனுரா பண்டாரநாயக்க, ஏ.எச்.எம். பௌசி ஆகியோா எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அரசின் முடிவு மடத்தனமானது என்று அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

அதனையே நாமும் கூறுகின்றோம்.அரசாங்க அமைச்சரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண 10 வருடங்களின் பின் சுனாமி மீண்டும் வரும் எனக் கூறியுள்ளாா.

இவருக்கு இது எவ்வாறு தெரியும்? சுனாமி வரப்போகின்றது என்பதை பல வருடங்களுக்கு முன் எவரும் எதிர்வு கூறமுடியாது. சில தினங்களுக்கு முன்னரே அறிய முடியும். 100 மீற்றர் விடயத்தில் ஜே.வி.பி மௌனம் சாதித்து வருகின்றது. 100 மீற்றா அறிவிப்பினை அமுல்படுத்த வேண்டாம் என்றே நாம் மீண்டும் மீண்டும் அரசாங்கத்தினைக் கோருகின்றோம்.

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் வீடுகள் அமைக்கப்படக் கூடாதென்ற தீர்மானத்தினை எடுத்தவர்கள் குளிர் அறைகளில் இருந்து கடமையாற்றுபவர்கள்.

அவர்கள் கொழும்புக்கு வெளியில் செல்லாதவர்கள். எனவே இத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்தக் கூடாது.

பந்துலகுணவர்தன சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் திட்டம் எதுவும் இல்லை. சுனாமி அனர்த்தத்தினையடுத்து இதுவரை வெளிநாட்டு உதவியாக 9,582 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை அரசாங்கத்தால் வழங்க முடியும்.

அரசியல் சுயநல நடவடிக்கைகளை விட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு அவகாசம் இருக்கின்றது.

ஆனால் அரசாங்கத்திடம் இதற்கான திட்டமெதுவும் இல்லை.

அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைக்க 5 இலட்சம் ரூபா வரையில் வழங்க வேண்டும். மக்களுக்கு இன்னமும் சரியான முறையில நிவாரணம் சென்றடையவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ப)

## நிவாரண விநியோகப் பணிகள் மட்டு. மாவட்டத்தில் துரிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் பணி துரிதப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென 15 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட இருக்கின்றன. சுமார் 9 ஆயிரம் கூடாரங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

புனரமைப்பு, புனர்வாழ்வு பிரதி அமைச்சர் டி.எம். தயாரத்ன தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் போது முன்சொன்ன விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 26 பாடசாலைகள் ஓரளவு சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன. பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் சுமார் 12 ஆயிரத்திற்கும் கூடுதலாக மாணவர்கள் இம் மாவட்டத்தில் உள்ளனர்.

6ஆயிரம் வீடுகளுக்கு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2 ஆயிரத்து 500 வீடுகளுக்கு மீண்டும் மின் விநியோகத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது.

அன்றைய பேச்சுக்களின் போது முதலமைச்சா் அததுல விஜயசிங்க, அமைச்சர் அமீா அலி,ஜே.வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கே. சுபசிங்கே மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ற)

# மனிதாபிமான உதவிகளுக்கு வழங்கக்கூடிய பொருட்களின் பட்டியலை வெளியிடுக!

## விமல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

மனிதாபிமான உதவிகளுக்கு வழங்கக்கூடியவை என்று கருதப்படும்



பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான பட்டியல் ஒன்றை வெளியிடுமாறு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விமல் வீரவன்ஸ அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை வெளியிட்ட பின் அதற்கேற்ப இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களும் இலங்கையின் பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

அதேவேளை, இலங்கைக்கு சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட இரண்டு ஹெலிகொப்டர்களையும் தொடர்பு சாதன உபகரணங்களையும் அரசுடமையாக்க வேண்டும்.

அத்துடன். இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாடுகளைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் அவற்றில் கடமையாற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பாக விரிவான ஆய்வுகளை நடாத்த வேண்டும்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக தேசிய அனர்த்த முகாமைத்துவ செயற்குழுவிடம் அறிவிக்கப்பட்ட பின்னர் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதும் தற்போதைய நிலைமையை நோக்கும் போது எந்தவொரு விடயமும்



கட்டுப்படுத்தப்படவில்லையென்பது புலனாகின்றது எனவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

## வீடமைக்க நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு, கிழக்குக் கரையோரப்பகுதிகளில் சுனாமி பேரனர்த்தங்களால் வீடுகளை இழந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இந்தவகையில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு சேவா லங்கா மற்றும் கியூடெக் கரிதாஸ் போன்ற நிறுவனங்கள் இத்திட்டத்திற்கு உதவிகளை செய்ய முன்வந்துள்ளன.

இதேவேளை, சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் மணற்காட்டுப் பகுதி மக்களுக்கு யுன்.என்.எச.சி.ஆர். 150 வீடுகள் அமைக்கும் திட்ட மொன்றை ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பித்துள்ளதாகவும் மிக விரைவில் இவ்வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டு வரணி மகாவித்தியாலயம், புலோலி மெதடிஸ் மிசன் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. (ப-35)

## உபகரணங்கள் அன்பளிப்பு

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் சுவிற்சர்லாந்தில் வசித்து வருபவருமான சுரேஸ் என்பவர் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்களை வழங்கியுள்ளார்.

அவர் இப்பொருட்களை இக் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள் விழாவில் வைத்து வழங்கியதுடன், பாடசாலை நூலகத்திற்கு 5 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்புச் செய்துள்ளார். (ற-49)

## குடிநீர் வசதி

(பொன்னாலை)

இருபாலை கிழக்குப் பகுதியில் 50 குடும்பங்களின் நலன் கருதி கோப்பாய் சாயி சமித்தி குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முதல் இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான நிதியை சாயி அன்பர் ஒருவர் சாயி சமித்தியூடாக வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ற-49)

## உற்சவம்

(பொன்னாலை)

கச்சதீவு- புனித அந்தோனியார் ஆலய வருடாந்த ஜாத்திரை ஸ்தல உற்சவம் எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இரு தினங்கள் மட்டும் மேற்படி ஆலயத்தில் நடைபெறவிருக்கும் இவ் உற்சவத்தில் நெடுந்தீவு, பங்குத் தந்தை வண.பிதா ஜெயநேசரட்ணம் அடிகள் திருப்பலி ஒப்புக்கொடுக்கவுள்ளார். (ப-49)

## விநியோகம்

(பொன்னாலை)

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வடமராட்சிப் பகுதி மக்களுக்கு மானிப்பாய் லியோ கழகத்தினர் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உடு புடவைகளையும் பால்மா வகைகளையும் வழங்கியுள்ளனர்.

இப்பொருட்கள் சக்கோட்டை தேவாலயத்தில் உள்ள நிவாரணப் பணிக்குழுவூடாக பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (ப-49)

# சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்க தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுதந்திரச் சிறகு கொய்யப்பட்ட நாம் எப்படி சுதந்திர தினததில் மகிழ்வது? 1948ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இலங்கைக்கான சுதந்திரத்தைச் சிங்களவர் தமது இனத்துக்கென்று மாற்றினர். அன்று தொடக்கம் தேசிய இனத்திற்கான சகல சாத்தியப்பாடுகளையும் கொண்டிருந்ததான தமிழ் இனம சிறுபான்மை முத்திரை குத்தப்பட்டு சுயநிர்ணய உரிமைகள் அபிலாசைகள், வாழ்வியல் பக்கங்கள் ஆகிய அனைதது வழிகளிலும் நசுக்கப்பட்டு வந்துள்ளது.

இவ்வாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும்,

ஒரு தேசிய இனத்தின் சுதந்திரம் களவாடப்படுவதை அறிந்து பல தடவைகள் வார்த்தைகளினூடாகப் போராடியும் பயனற்றுப்போனது. 1956இல் ஆட்சிப்பீடம் ஏறிய அரசு சிங்களஇனமே இலங்கையின் தனியொரு இனம என்பதை நிலைநிறுத்த அரச கருமமொழிகளில் தமிழ்மொழி நீக்கப்பட்டு சிங்கள மொழியின் தனிச்சட்டத்தைக்கொண்டு வந்தது.

இதனூடாக தமிழினத்தின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களும் ஒப்பநதங்கயும் பயனற்றுப்போயின. இந்த நிலையில் தமிழ் இனம் தனக்கென்றொரு நிலம், மொழி, பண்பாடு, மக்கள் ஆகியவற்றைக்கொண்ட தனி அரசிற்கான கட்டமைபபைக்கொண்டது என்பது உணரப்பட்டது.

தனியரசிற்கான கட்டமைப்பைக்கொண்ட தமிழினத்தின் தலைநிமிாவிற்கு இரத்தம் சிந்திப்போராட வேண்டியநிலை ஏற்பட்டது. இந்த நிலையில தான் ஆற்றல், ஆளுமை, வீரம் துணிவு, தியாகம் முதலான பணபுகளைக்கொண்ட தலைமை தமிழினத்திற்குக் கிடைததது. 1972ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலை இயக்கத்தின் தோற்றமும், ஆயுதப் போராட்டமும் தமிழ் இனத்தின் சுதந்திரப் பாதைகளையும் மக்கள் மீதான விடுதலை வேட்கையையும் திறக்கச் செய்தன.

அன்றிலிருந்து விடுதலைப் புலிகளின் சுடுகுழல்களில் இருந்து புறப்பட்ட குண்டுகள் ஒவ்வொன்றும் இனவாத இருட்டை பிழந்ததோடு தமிழ் இனத்தின் விடுதலை வெளிச்சத்தைப் பரப்பி நின்றது. இத்தகைய நிலைக்குக் காரணம் சிங்களத் தலைமைகளும் மறுக்கப்பட்ட சுதந்திரமும்தான். இன்றுவரை எமது சுதந்திரப் போராட்டம் தொடர்ந்த நிலையில் வல்லாதிக்க சக்திகளால் கூட அழிக்க முடியாத பலமும் ஆளுமையும் மிக்கதாக வளர்ச்சிப்படிகளில் நின்றபடி நிச்சயமான சுதந்திரத்தின் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதே தவிர இன்னும் முழுமையான சுதந்திரத்தையும் பெறவில்லை.

இத்தகைய நிலையில் சிங்கள அரசு சமாதானப போர்வையினை போர்த்தியபடி எமது நிலமெங்கும் துப்பாக்கி தாங்கிய இராணுவத்தையும் முள்ளு வேலிகளையும் அமைத்தபடி எமது குடியிருப்புப் பிரதேசங்களை எமக்கு மீண்டும் கையளிக்க விரும்பாதபடி எமது போராட்டத்திற்கு முகங்கொடுக்கும்பலம் இல்லாதபடி இப்படியே பல படிகளில் சிக்கித்தவிக்கிறது.

எனினும் எமது சுதந்திரத்தை எமக்குத் தர விரும்பாதபடியே அரசு இருக்கிறது. இந்த சமாதான காலத்தின் தீர்விற்கான முனனெடுப்புக்களில் அக்கறை காட்டாது மீண்டும் ஒரு யுத்தத்திற்கான முன்னெடுப்புக்களிலேயே அக்கறை காட்டுகிறது.

எனவே இந்த சுதந்திர தினம் தமிழருக்குமான சுதந்திரதினமாக மாறும்வரை எமது நிலத்திலும் மனத்திலும் துக்கதினமாகவே அனுஷ்டிக்கப்படவேணடும். எமது நிலம் முழுவதிலும் கறுப்புக்கொடிகளைப் பறகக விட்டு இந்த சுதந்திரதினத்தை நிராகரிக்க வேண்டும். (ப)

## முன்னாள் மலேஷியப் பிரதமர் மே மாதம் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

முன்னாள் மலேசியப் பிரதமர் டாக்டர் மகதிர் மொகமட் எதிர்வரும் மேமாதமளவில் இலங்கை வரவுள்ளார்.

ஆசியாவின் மிகச் சிறநத தலைவர்களுள் ஒருவரான இவர் மேயில் இலங்கையில் நடைபெறவுள்ள 'சிமா' வர்த்தகர்களின் உலக உச்சி மாநாட்டில் முக்கிய உரையாற்றவுள்ளார்.

இவரைவிட பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெற் அணித் தலைவர் இம்ரான்கானும் இம் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார்.

மே-26,27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் ஆயிரம் பேர் வரையில் பங்குபற்றுவர் எனத் தெரிவிககப்படுகிறது. தற்போது கொழும்பில் பங்குச்சந்தையில் பெருமளவு பங்குகளைக் கொளவனவு செய்து பெரும் முதலீட்டை மேற்கொண்டுள்ள கோடீஸ்வர தமிழர் ராஜ் ராஜரட்ணமும் இதில் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், எயார் ஏசியா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, சொனி பெர்னாண்டஸ், குளோபல் பிசினஸ் ட்வல்ஸ் நிறுவனத்தின் பிரதம அதிகாரி பிரியான் பெர்னாண்டோ ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-6)

## சுனாமி அனர்த்தப் பணிகளுக்காக அரசாங்கம் 400 மில்லியன் ரூபாவை வடக்குக் கிழக்கில் செலவிட்டுள்ளது

சிறீலங்கா அரசு வடக்கு கிழககிற்கு இதுவரை 400 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்று கூறும் தேசிய சுனாமி அனர்த்த செயற்பாட்டு அமைப்பு, இத் தொகையில் பெரும்பகுதி வடக்கு கிழக்கில் இறந்து போனவர்களைப் புதைககும் பணிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு-கிழக்குக்கு நிவாரண நிதி வழங்கப்படுவதில் எந்தக் குறையும் இல்லை என்று கூறும், சி.என்.ஓ. என்ற இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு, இறந்த உடல்களை அடக்கம் செய்வதில் பெருமளவு நிதி செலவிடப்பட்டு விட்டதாகவும், மேலதிக நிதி உணவுகளை வழங்குவதில் செலவிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. அம்பாறைக்கு 110 மில்லியனும், யாழ்ப்பாணத்திற்கு 42 மில்லியனும், கிளிநொச்சிக்கு 46 மில்லியனும், முல்லைத்தீவுக்கு 45 மில்லியனும், திருகோணமலைக்கு 65 மில்லியனும், மட்டக்களப்புக்கு 95 மில்லியனும் இதுவரை வழங்கப்பட்டதாக இந்த அமைப்பின் தலைவர் டாக்டர் ராறாடிமெல் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியில், அப்பகுதியின உடனடித் தேவை கருதி, சடலங்களை அடக்கம் செய்வது, எரிபபது அல்லது அகற்றுவது உட்பட உடனடி நிவாரணத் தேவைகளுக்கு அரசு பயன்படுத்திவிட்டதாக இந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும், சுனாமி பேரலையின் தாக்கத்தைத் தொடர்ந்து, முதல் சில நாட்களுக்கு தமிழர் புனர்வாழவுக் கழகம், விடுதலைப் புலிகள் அமைப்பு, கரிற்றாஸ், கியூடெக் உட்பட குருக்கள், துறவியர், ஆலயத் தொண்டர்கள் போன்றவர்களுடன் பொதுமக்களும் இணைந்தே இந்த உடனடி விடயங்களைக் கவனித்ததாகவும், அரசு உடனடித் தேவைக்கென வடக்கு-கிழக்கிற்கு எதையுமே செலவிடாத நிலையில், இந்தக் கணக்கு முற்றுமுழுதான ஒரு ஏமாற்று அறிவிப்பே என்றும் கூறப்படுகிறது. (ப)

## பேசுபவரை விரல் ரேகைமூலம் அறிந்துகொள்ளும் செல்போன்

(பெல்ஜிங்)

விரல் ரேகைகளைப் பதிவு செய்து அதன் மூலம் போனை இயக்குபவரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய நவீன தொழில்நுடபம் கொண்ட செல்போனை சீன நிறுவனமொன்று விரைவில் தயாரிக்கவுள்ளது.

இனடர்நெட மூலமாக நடைபெறும் மின்னணு வர்த்தகத்தை இ.காமர்ஸ் இந்த செல்போன் வழியாக மேற்கொள்ள முடியும்.

பெருவிரல் ரேகையை மென்மையாக அந்த செல்போன் திரையில் பதித்தால் போதும. அதை அந்த செல்போன் பதிவு செய்துகொள்ளும். பின்னர் அந்த போனை இயக்க வேண்டுமானால அந்தப் பெருவிரல் ரேகையை அத் திரையில் பதிக்கவேண்டும்.

எனவே, ஆள் மாறாட்டம் செய்ய அதில் வழியில்லை. எனவே, வங்கியிலிருந்து இன்டர்நெட் மூலம் பணம பெறுவது பொருள்களை வாங்குவது ஆகியவற்றுக்கும் அந்த செல்போனைப் பயன்படுத்த முடியும என்று அதைத தயாரிக்கவுளள சீன செல்போன் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதறகான தொழில் நுட்பத்தை சீன அறிவியல் அகாதெமியைச் சேர்ந்த தானியங்கித் தொழில் நுட்ப நிறுவனத்திடமிருந்து அந்த நிறுவனம் விலைக்கு வாங்கியுள்ளது.

இப்போதைய செல்போன்களில் அந்தப் புதிய தொழில்நுட்ப வசதியை அளிக்க 270 ரூபா தான் கூடுதலாகச் செலவாகும் என்றும் அந்த நிறுவனம் கூறியிருக்கிறது. (க)

## நலன்புரி நடவடிக்கைகளில் சகல பிரதேச செயலர்களும்

(கொழும்பு)

சுனாமி அனாத்தங்களினால் பாதிககப்பட்ட பிரதேசங்களில் நலன்புரி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு ஏனைய பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர்களையும் கடமையில் ஈடுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மற்றும் குருநாகல் கேகாலை ஆகிய பிரதேசங்களிலிருந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பிரதேச செயலாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ் மொழியை பேசக்கூடிய கொழும்பு, குருநாகல், புத்தளம் ஆகிய பகுதிகளைச சேர்ந்த பிரதேச செயலாளர்கள், அம்பாறை மட்டக்களப்புப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் நலன்புரி பணிகளை துரிதப்படுத்துவதற்காக தமிழ்மொழி பேசக்கூடிய மேலும் சில பிரதேச செயலாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அங்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்களையும், நஷ்ட ஈட்டையும் உரியமுறையில் துரிதமாக வழங்குவதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அனைத்து ஆலோசனைகளும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு தெளிவாக வழங்கபபட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க-9)

## சுனாமி ஆழிப் பேரலைத் தாக்கத்தால் மருதங்கேணி உதவி அரச அதிபர்பிரிவில் 142 மாணவர்கள் பலியாகியுள்ளனர்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமி அனர்த்தங்களால் 142 மாணவர்கள் மரணமடைந்துள்ளனர்.

மருதங்கேணி கல்விக்கோட்டத்திலுள்ள 10 மாவட்டங்களைச்சோந்த 142 மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் தான் கூடுதலான மாணவர்கள் சுனாமி பேரலை அனாததத்தினால் பலியாகியுள்ளனர்.

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் ஐம்பது மாணவர்களும், மருதங்கேணி இந்துக் கலவன் பாடசாலையில் இருபததேழு மாணவர்களும், ஆழியவளை சி.சி.த.க.பாடசாலையில் இருபத்திமூன்று மாணவர்களும் தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் பத்து மாணவர்களும், செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலையில் ஒன்பது மாணவர்களும் வெற்றிலைககேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் ஒன்பது மாணவர்களும், மாமுனை அ.த.க. பாடசாலையில் ஆறு மாணவர்களும், வெற்றிலைக்கேணி றோ.க.த. கபாடசாலையில் நான்கு மாணவர்களும், கட்டைக்காடு றோ.கதகபாடசாலையில நான்கு மாணவர்களுமாக 142மாணவர்கள் பலியாகியுள்ளனர். (ப-35)

## ஆசிரிய இடமாற்றங்கள் மார்ச் முதல் அமுலுக்கு

(கொழும்பு)

2005ஆம் ஆண்டிற்கான ஆசிரிய இடமாற்றங்களை மார்ச மாதம் முதலாம் திகதி முதல் அமுல்ப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி இடமாற்றங்களுக்கு விண்ணப்பித்து தகுதி பெற்ற ஆசிரியர்கள் குறிப்பிட்ட தினம் முதல் இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

இதனால் இடமாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் ஆசிரியர்கள் தங்களது இடமாற்றம் தொடர்பாக விசாரணைகள செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, 2005ஆம் ஆணடிற்கான கல்வியியற் கல்லூரியின் நியமனங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன.

எனவே, இதற்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சுக் கேட்டுள்ளது. (க-9)

## இன்று ஒரு தகவல்

# மன்னரும் கவிஞரும்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவரது பெயர் போஜ ராஜா அவரது அரச சபையில் ஒரு கவிஞர் இருந்தார். அவரது பெயர் காளிதாசர். என்ன சார் இதெல்லாம் தெரிந்த விடயம் தானே? ஏதோ புதிதாக சொல்வது போல் நான் ஆரம்பிக்கிறேனே என்று நினைக்கின்றீர்களா? சிறு பிள்ளைகளுக்கு இப்படி ஆரம்பித்தால்தான் பிடிக்கும் அதனால் அப்படி ஆரம்பித்தேன் வேறு ஒன்றுமில்லை. இனி விஷயத்திற்கு வருகிறேன்.

போஜராஜா ஒருநாள் காளிதாசரைக் கூப்பிட்டார். "என்னைப் பற்றி ஒரு பாட்டுப்பாடு" என்றார். "நீ பாடும் பாட்டு எப்படி இருக்கவேண்டுமென்றால் நான் இறந்து போன பின்பு நீ எப்படிப்பாடுவாயோ அப்படி இருக்க வேண்டும். அதுபோல் பாடு" என்று உத்தரவிட்டார். "போஜராஜனே! அதுபோல் நான் இரங்கற்பா பாடினால் நீ உண்மையாகவே இறந்து விடுவாய் ஏனென்றால் எனது நாக்கில் சரஸ்வதி இருப்பதனால் சொல்வது பலித்துவிடும் அதனால் வேண்டாம்" என்றார் காளிதாசர்.

இவர் இப்படிச் சொனனவுடன் ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. ராஜாவின் பேச்சை மதிக்காவிட்டால் சும்மாவா? உடனே காளிதாசரை தேசப்பிரஷ்டம் செய்துவிட்டார். அதாவது நாடு கடத்தி விட்டார். ஏதோ அவசரத்தில் அப்படிச் செய்து விட்டாரே தவிர ராஜாவுக்கு கொஞ்சநாளில் மிகவும் கவலையாகிவிட்டது. "ஒரு நல்ல நண்பர் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாரே" என்று மிகவும் வருத்தப்பட்டார்.

"சரி ! அவர் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று முடிவு செய்தார். ஒரு குடு குடுபபைக்காரன் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு அவரைத் தேடிப் புறப்பட்டார். ஊர் ஊராக அலைந்தார். ஒரு ஊருக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒரு கசாப்புக்கடை அதற்கு முன்னால் ஒரு சந்நியாசி நின்று கொண்டிருந்தார். அவர் விளையாட்டாக 'கறி என்ன விலை?' என்று கடைக்காரரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

போஜராஜா இதைப்பார்த்தார். அந்த சந்நியாசி வேறு யாருமல்ல... அவர்தான் காளிதாசர் என்பதைத் அடையாளம் கண்டு கொண்டார். ஆனாலும் காளிதாசருக்கு ராஜாவை அடையாளம் தெரியவில்லை. இவர்தான் குடுகுடுப்பைக்காரன் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாரே ராஜா அவரைப் பார்த்து "ஏன் சுவாமி! காவித் துணிகட்டிக்கொண்டு இப்படி கறியின் விலை என்னவென்று கேட்டுக்கொண்டு நிற்கிறீர்களே! இது நியாயமா?" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் எப்போதும் மாமிசம் சாப்பிடுவதில்லை. மது அருந்தும் நேரத்தில் மட்டும் அதைச் சாப்பிடுவேன்" என்றார். இவர் அசந்து போய் நின்று விட்டார்.

"ஏன் இப்படி அசந்து போய் நிற்கிறீர்கள்? உங்கள் ஊரில் இவை கிடையாதா? நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார். "நான் தாராநகரம்" என்றார் ராஜா. உடனே சந்நியாசியின் கோலத்தில் இருந்த காளிதாசர் "தாராநகரமா? அங்குள்ள போஜ ராஜா எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர்! அவர் எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார். "நேற்றுத்தான் அவர் செத்துப் போனார்" என்றார் ராஜா. காளிதாசர் அதிர்ச்சியாகிவிட்டார். கண்களில் கண்ணீர் மல்க "தாரா நிராதாரா" என்று ஆரம்பித்து ஒரு சுலோகம் பாடினார்.

"சரஸ்வதிக்குப் பற்றுக்கோடில்லாமல் போய்விட்டது. என்னைப்போன்ற புலவர்கள் இனிமேல் கண்டிக்கப்படுவார்கள். போஜராஜா! நீ மோட்சலோகம் போய்விட்டாயே" என்ற அர்த்தத்தில் காளிதாசர் இரங்கற்பா பாடினார் அவ்வளவுதான் போஜ ராஜா பொத் என்று கீழே விழுந்து இறந்துவிட்டார்.

அதன்பின்பு தான் காளிதசாருக்கு விஷயம் புரிந்தது உடனே "என் நண்பருக்கு உயிர்ப் பிச்சை கொடு" என்று சரஸ்வதியிடம் வேண்டினார். உடனே சரஸ்வதி தேவி காட்சியளித்தார். "அவரை பிழைக்கவைக்கிறேன்! ஆனால் முழு ஆயுளையும் தர முடியாது. ஏழ்ரை நாழிகைக்கு ஆயுள்தருகிறேன். அதன் பின் அவர் செத்துவிடுவார்" என்றார்.

ஏழரை நாழிகை என்றால் மூன்று மணித்தியாலம். போஜ ராஜா பிழைத்து எழுந்தார். ஏழரை நாழிகைதான் ஆயுள் என்று அறிந்ததும் ஒரு வினாடி கூட வீணாக்கக்கூடாது என்று முடிவு செய்தார். காளிதாசரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். "நானும் நீயும் சேர்ந்து ஒரு இராமாயணம் பாடலாம் என்றார். இருவரும் மாறி மாறி பாடி ஏழரை நாழிகையில் இராமாயணம் பாடி முடித்தனர். அதற்கு போஜசம்பு என்று பெயர். போஜ ராஜாதான் ஏழரை நாழிகையில் இறந்து விட்டார். போஜசம்பு இறக்கவில்லை அது நிலைத்துவிட்டது.

எதற்கு இந்தக் கதையைச் சொல்கிறேன் என்றால் அந்தக் காலத்திலெல்லாம் எழுதியவர்கள் இறந்துபோவார்கள். அவர்கள் எழுதி வைப்பது சாகாது. இந்தக் காலத்திலெல்லாம் எழுத்துக்கு ஆயுள் குறைவு. எழுதுபவர்களுக்கு அந்தப் பிரச்சினை இல்லை.

இந்தக்காலத்து எழுத்தாளர் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன் "போஜராஜனுக்கு வந்த நிலை உங்களுக்கு ஏற்பட்டால் என்ன செய்வீகள்?" என்று கேட்டேன். "அதாவது ஏழரை நாழிகை தான் உயிருடன இருப்பீர்கள் என்றதும் அவர் இராமாயணம் எழுதினார். நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்றேன். இதற்கு அவர் "உயில் எழுதுவேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்தே இலங்கையினை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்

## சந்தர்ப்பத்தை சாதகமாக்கி சமாதானத்தை முன்னெடுக்கவும் ஜப்பான் அமைச்சர் சூசென் தனிகாவா ஆலோசனை

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தையடுத்து புனரமைப்புப் பணிகளில் அரசாங்கம், விடுதலைப் புலிகள் உட்பட அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். இதன்மூலமே நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். இந்த சந்தர்ப்பத்தினை சமாதான முன்னெடுப்புக்காகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜப்பானின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சூசென் தனிகாவா தெரிவித்தார்.**

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு, புனாவாழ்வு நடவடிக்கைகளுக்கு ஜப்பான் அதிகூடிய உதவிகளை வழங்கும் என்றும் அவா சொன்னா.

இலங்கைக்கு நான்குநாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 29 ஆம் திகதி இங்கு வந்த ஜப்பானின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சூசென் தனிகாவா நேற்று முன்தினம் மாலை இலங்கையில் இருந்து புறப்பட முன்னர் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றினை நடத்தினார். இங்கு கருத்துத் தொிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தொிவித்தா.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கைக்கு விஜயம் செய்த நான் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோரை சந்தித்துப் பேசினேன். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாத்தறை, காலி பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டேன்.

சுனாமி அனாத்தத்தினையடுத்து உடனடி அவசர உதவிகளை நாம் வழங்கினோம். ஜகார்த்தாவில் நடைபெற்ற மாநாட்டில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு 500 மில்லியன் அமொிக்க டொலர்களை வழங்க நாம் முடிவு செய்தோம். இதில் 80 மில்லியன் டொலர் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி அனாத்தத்தையடுத்து தொண்டர் நிறுவனங்கள் மூலமும் நாம் உதவிகளை வழங்கி வருகின்றோம். இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு ஜப்பான் அதிகூடிய உதவிகளை வழங்கும்.

சுனாமி அனர்த்த முகாமைத்துவ எச்சா்க்கை நிலையம் ஒன்றை இந்துசமுத்திரத்தில் நிறுவுவதற்கு ஜப்பான் தொழில்நுட்ப உதவிகளை இலங்கைக்கு வழங்கத் தயாராகவுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் விடயத்தில் அரசாங்கமும் புலிகளும், ஏனைய தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தினை சமாதான முயற்சியின் முன்னெடுப்புக்கும் பயன்படுத்த வேண்டும்.

சுனாமி உதவிகள் இலங்கை அரசாங்கத்தினூடாகவே வழங்கப்படும்.சுனாமி அனர்த்தத்தையடுத்து இலங்கை மீளவும் பழைய நிலைக்குத் திரும்பி வருகின்றது. மீட்புப் பணிகள் முடிவடைந்துள்ளமையையும் நான் கண்டேன்.

இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பில் யசூசி அகாஷி அரசாங்கத்துடன் இணைந்து செயறபட்டுவருகின்றாா. சுனாமி அனாத்தத்தினால் ஏற்பட்ட சந்தர்ப்பத்தினை சமாதான முயற்சியின் முன்னேற்றத்துக்கு பயன்படுத்த வேண்டும்.

இலங்கையில் சுனாமி காரணமாக மரணித்த 11 ஜப்பான் நாட்டவாகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதற்காக நாம் இலங்கை அரசாங்கத்துக்கு நன்றி கூறுகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# ஐரோப்பிய மருத்துவ குழுவினர் கிழக்கு மாகாணத்தில் சேவை

## உதவுபொருட்களையும் வழங்கினர்

(மட்டக்களப்பு)

மட்டு. அம்பாறை தமிழீழ மருத்துவத்துறையின் அழைப்பின் பேரில் வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியத்தின மருத்துவக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான கச்சக்கொடி சுவாமிமலை, 40ம் கொலனி ஆகிய இடங்களில இவ் மருத்துவக் குழுவினரால் வைத்திய முகாம் நடாத்தப்பட்டது.

இக்குழு பின்னர் பழுகாமம் காந்தரூபன் அறிவுச் சோலைக்குச் சென்று பத்தாயிரம் ரூபாவினை அன்பளிப்பு செய்ததுடன், கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லத்திற்கு சென்ற குழுவினர் அங்குள்ள சிறார்களுக்கு உதவிகள் மேற்கொண்டனர். இதேவேளை பல வறிய குடும்பங்களுக்கு குழந்தைகளுக்கான உலர் உணவு, ஆடைகள், நுளம்பு வலைகள் அன்பளிப்பாகவும் வழங்கப்பட்டது. இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவக் குழுவினருடன் மட்டு. அம்பாறை மருத்துவக் குழுவினராகிய மட்டு. அம்பாறை மருத்துவப் பொறுப்பாளர் ரவிமோகன், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் தமிழ்வேணி உட்பட மருத்துவ போராளிகளான உதயராஜ், அன்பு, தணிகை, மீனாழன் உள்ளிட்டோர் இணைந்து இச் சேவைகளை வழங்கினர்.

அததுடன், மட்டு. அம்பாறை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி, மாவடி முன்மாரிக் கோட்ட துணை இராணுவத் தளபதி யோகராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்த மருத்துவக் குழுவினரின் சேவைக்கு முன்பாக கரடியனாறு, திக்கோடை போன்ற பகுதிகளில் வேறு ஒரு வெளிநாட்டுக் குழுவினர் இவ்வாறான உதவிகளை தமிழீழ மருத்துவக் குழுவின் அழைப்பின் பேரில் வருகை தந்து மருத்துவ உதவிகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (ப)

# சட்டத்தைப் பாதுகாக்கும் செயல் திட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது

## -அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட செயல்திட்டம் மிகச் சிறந்தமுறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மலிந்து கிடக்கும் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நான் ஒரு விடயத்தை கூறிக்கொள்ள விரும்புகினறேன் எந்தவித இடர்களையும் கருத்தில் கொள்ளாது மேலும் அதிக ஈடுபாட்டுடன் சட்டத்தை மதிக்கும் சமூகங்கள் உள்ள ஒரு நாட்டை உருவாக்குவதற்கு நாம் அதிக ஈடுபாட்டுடன் செயறபடுவோம்.

எந்தச் சக்தியினதும் அழுத்தங்களுக்கு நாம் அடிபணியமாட்டோம். குறிப்பாக பாதாள உலகக் கோஷ்டியினரின் அச்சுறுத்தல்களுக்கும் நாம் அடிபணியமாட்டோம். பொலிஸாருக்கு இது வழக்கமான விடயம். இவ்வாறான அழுத்தங்களுக்கு அவர்கள் ஒருபோதும் சோரம் போகமாட்டார்கள்.

இததகைய நடவடிக்கைகள் தொடா்பாக அவா்களுக்கு போதிய அனுபவம் உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

## கல்வி உபகரணங்கள் வழங்கல்

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ. தணடபாணி தேசிகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவார். (ப-35)

# உண்மையின் உருவாய் விளங்கும் புதுமை அன்னையின் அருளாட்சி

இயேசுவின் தாயாக உள்ள மரியன்னை குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் புதுமை அன்னையாக வீற்றிருந்து வரம் கேட்



கும் பக்தர்களுக்கு அருள் மழை பொழிந்து வருகின்றார்.

அருளாட்சி செய்யும் புதுமை அன்னைக்கு இன்று வியாழக் கிழமை கோலாகலத் திருவிழா நடைபெறவுள்ளது.

2000 ஆம் ஆண்டு யூபிலி யாத்திரைத் தலமாக அன்னையின் ஆலயம் பிரகடனப்படுத்தப்பட்டமை அன்னை வீற்றிருக்கும் ஆலயத்திற்குக்கிடைத்த பெருமையாகும். ஒவ்வொரு நாளும் தேடிவரும் பக்தர்களுக்கு கேட்கும் வரங்களை அள்ளி வழங்கும் அன்னை காணிக்கை அன்னையாகவும் பெயர் பெற்றிருக்கின்றார்.

குழந்தை இயேசுவைக் கையிலேந்தி செங்கோலோடு காணப்படும் அன்னை இன்று புதுமைகள் பல புரிந்து வருகின்றார்.

இவ் ஆலயம் இலங்கையின் வடபகுதியின் மத்தியில் உள்ள யாழ்ப்பாணப் பட்டணத்தில் குருநகர் என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது. நாலாபக்கமும் உள்ள தெருக்களின் நடுவில் கடல் வளம் கொஞ்சும் ஊரில் உள்ளது அன்னையின் ஆலயம்.

பெருமையோடும் புகழோடும் ஓங்கி நிற்கும் புதுமைமாதா ஆலயத்தில்தான் புதுமை அன்னை குடிகொண்டிருக்கிறார். யூபிலி யாத்திரைத்தலம் என அழைக்கப்படும் இத்தலத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் புதுமை அன்னை ஆயிரக்கணக்கான பக்தர்களைத் தன்பால் ஈர்த்து வருகின்றார்.

இந்தப் பக்தியானது சுமார் ஆயிரத்து 450 ஆம் ஆண்டளவில் இருந்து ஆரம்பமானது. போர்த்துக்கேயரால் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட இப்பக்தி முயற்சி தற்போது இலங்கை பூராகவும் பரவிநிற்கின்றது. போர்த்துக்கேயரால் கொட்டில் வடிவில் உருவாக்கப்பட்ட அன்னையின் ஆலயம் ஆரம்பத்தில் வெற்றி மாதா எனப்பெயர் கொண்டு அமைந்திருந்தது.

'பரமனின் தாயே பாவியரின் தஞ்சமே
எங்கள் புதுமை மாதாவே...
உம் பிள்ளைகள் எமக்காய்
வேண்டிக் கொள்ளும்'

அன்னை செய்த புதுமைகளினால் பக்தர்கள் புதுமை அன்னையாக பெயர் கொண்டு அழைத்தனர்.

ஆரம்பத்தில் கொட்டிலாக அமைக்கப்பட்ட அன்னையின் ஆலயம் இப்பொழுது கட்டடமாக எழுப்பப்பட்டு அழகுறக் காணப்படுகிறது.

அன்னையின் முகப்புக் கட்டடம் (டோம்) 1881 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது அன்னையின் ஆலயத்திற்கு அழகு சேர்ப்பதாகக் காணப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியாகக் கொண்டாடப்பட்ட காணிக்கை அன்னையின் திருவிழா அப்போது இருந்த ஆயராலும், பங்குத்தந்தையாலும் 3 ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

### காணிக்கை அன்னையெனப் பெயர் வரக்காரணம்

இயேசு குழந்தையாக இருந்த பொழுது அன்னை அவரைக் கையில் எடுத்துச்சென்று இறைவனிடம் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கின்றார். அதனாலேயே புதுமை மாதா ஆலயத்தில் வீற்றிருக்கும் அன்னையைக் காணிக்கை அன்னை எனவும் அழைக்கின்றனர்.

இந்தத் திருநாள் முதலில் ஜெருசலேம் நகரில் தொடங்கப்பட்டதென கி.பி.400 ஆம் ஆண்டில் எஜேரியா என்ற ஒரு துறவி (அங்கு திருப்பணியாகச் சென்றவர்) குறிப்பிடுகின்றார். அந் நகரத்தைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார்.

கிறிஸ்து பிறப்பில் பெருவிழாவிற்குப் பின் 40 நாட்கள் கழித்து, நடைபெறும் இவ் விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உயிர்த்த ஆண்டவரின் ஆலயத்திற்கு ஒரு மாபெரும் ஊர்வலம் வந்தடைகின்றது. மக்கள் திருவழிபாட்டிற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். ஆயர்களும், குருக்களும் எவ்வாறு 40 ஆம் நாள் கன்னித்தாயும், சூசையும் குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தனர் என்ற நற்செய்தி பகுதியை வாசித்து மறையுரை ஆற்றுகின்றனர். ஆலயத்தில் காணிக்கை செலுத்தி, குழந்தையை ஆர்ப்பணித்து மீண்டும் பெற்றுக் கொண்டனர் என்ற நிகழ்ச்சியை விரித்துரைத்து விளக்கம் அளிக்கின்றனர்.

இந்தக் காலத்தில், இத்தகைய தூய்மை பெறும் சடங்கு மறைந்துவிட்டது. குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் எந்த வகையிலும் மாசுபடுவதில்லை என்ற புதிய விளக்கமே இதற்குக் காரணம். 526 ஆம் ஆண்டு இந்தத் திருநாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கொன்ஸ்டாண்டிநோபிள் நகரில் மாபெரும் பிளேக நோய் அடியோடு நீங்கியதற்கு நன்றியறிதலாக, முதலாம் ஜஸ்டினியன் மன்னனால் தோற்றுவிக்கப்பட்டது. கிரேக்கத் திருச்சபையில் இவ்விழா 'ஆண்டவரும் அவர் தம் தாயும், சிமியோனையும், அன்னாவையும் சந்தித்த விழா' என்றும் அழைக்கப்படுகிறது. மெழுகுவர்த்தித் திருநாள் எனவும் அழைக்கப்படுகிறது.



'குரு பிடித்திருக்கும் எரிகின்ற திரி உலகின் இருளை நீக்க வந்த உலகின் ஒளியாம் கிறிஸ்துவைக்குறிக்கின்றது என்றும், நாம் வைத்திருக்கும் எரிகின்ற திரி, கிறிஸ்துவை வாழ்வின் இறுதியில் எதிர்கொள்ளப் போகும்போது நற்செயல்களின் மூலம் ஒளிமயமாய் இருக்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது' என்கிறார் புனித சொப்பரோனியுஸ்.

'சுனாமி அனர்த்தத்தால் துவண்டு போயிருக்கும் மக்களுக்காக இன்று தனது திருநாளைக் கொண்டாடும் புதுமை அன்னையிடம் விசேடமாக வேண்டுவோம்'

### புதுமை அன்னையின் அருளாட்சி

அன்னையின் ஆலயத்தில் சனிக்கிழமைகளில் பெருகும் மக்களினால் அன்னையின் புகழ் இலங்கை பூராகவும் பரவுகிறது. புதுமை மாதா ஆலயம் அன்னையின் திருத்தலமாக மாறியுள்ளது. அன்னையின் பெயர் கொண்ட ஆலயத்தில் அதிகமாக மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் பக்தர்கள் கூடி அவளை மகிமைப்படுத்துவது எத்துணைப் பொருத்தமானது.

புதுமை அன்னை தம்மைத் தேடி வருவோருக்கு உண்மையின் ஒளியாய் இருக்கிறார். தனது மகனின் அருளால் அன்னை பக்தர்களுக்கு அருளையும் அன்பையும் பொழிகிறார். உண்மையின் ஒளியாய் இருக்கும் புதுமை அன்னை துன்பங்களைத் துடைக்கிறார். பாவங்களை மன்னிக்கிறார். தீமைகளை அகற்றுகிறார். பக்தனுக்காக தனது மகன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பரிந்து பேசுகிறார். உள்ளங்க

### நேயல்

ளில் இறை அன்பையும் வாரி இறைக்கிறார். எல்லோருக்கும் ஆறுதல் அளிப்பவராக புதுமை அன்னை இருக்கின்றார் என்பதற்கு இத்திருத்தலத்தில் நாளாந்தம், வாராந்தம் வந்து குவியும் பக்தர்களே சாட்சி என்றால் அது மிகை இல்லை. அன்னையின் திருநாளில் பங்குபற்றி அன்னையின் ஆசீரைப்பெற அனைவரையும் அழைக்கின்றோம். □

## இலங்கையில் சுனாமி எச்சரிக்கை மையத்தை நிறுவ ஜப்பான் எந்நேரமும் தயார்

(கொழும்பு)

இலங்கையில் ஆழிப்பேரலை எச்சரிக்கை மையமொன்றை அமைப்பதற்கு எந்நேரமும் உதவ ஜப்பான் தயாராக இருப்பதாக ஜப்பானியத் துணை வெளிவிவகார அமைச்சர் சுசன் தனிக்ஷவா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்த இவர், தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்ப முன்பு கொழும்பில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஆழிப்பேரலை எச்சரிக்கை மையத்திற்கு தேவையான தொழில் நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு ஜப்பான் தயாராகவிருக்கின்றது. ஆனால் அதற்குரிய இடம் தெரிவு செய்தல் மற்றும் உரிய அதிகாரிகளை தெரிவு செய்தல் ஆகியவற்றிற்கு இலங்கை கால அவகாசம் கோரியுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தகவல்களை வெளியிட்ட அவர், இதுவரை ஆழிப்பேரலை நிவாரண உதவியாக இலங்கைக்கு 80 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை நேரடியாக ஜப்பான் வழங்கியுள்ளது என்றும் கூறினார். (ப)

## அகதிமுகாமில் ஆபாசப் படங்கள்

(மட்டக்களப்பு)

திருக்கோவில் ..ண்டான அகதிகள் நலன்புரி நிலையத்தில் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினர் ஆங்கில ஆபாசப் படங்களை ஒளிபரப்பு செய்வதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உயிர் உடமைகளை இழந்து வேதனையில் நொந்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு களிப்பூட்டல் என்ற போர்வையில் கலாசார சீர்கேடான முறையில் ஆபாசத் திரைப்படங்களை ஒளிபரப்புச் செய்வதால் சமூகம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விநாயகபுரம் பொதுநல அமைப்பு உடும்பன்குள அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலாகரனிடம் முறைப்பாடு செய்துள்ளது. (ப)

## கிழக்கில் கரையொதுங்கும் இந்தோனேஷியப் பொருட்களை பொறுக்குவதற்கு முண்டியடிப்பு

(கொழும்பு)

சுனாமி தாக்கத்தின் போது இந்தோனேஷியாவில் இருந்து அடித்துச்செல்லப்பட்ட பொருட்கள் கிழக்குக் கடற்கரையில் ஒதுங்குவதாகக் கூறப்படுகிறது. கடந்த மூன்று தினங்களாக ஆயிரக்கணக்கான மரக்குற்றிகள், தேங்காய்கள் பல்வேறு வீட்டுப் பாவனைப் பொருட்கள், மின் குமிழ்கள் ஆகிய பொருட்கள் கரையொதுங்கின.

கரையொதுங்கும் பொருட்களுக்காக மக்கள் கூட்டம் தினமும் காலைப் பொழுதில் முண்டியடிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு கரையொதுங்கிய இரண்டு மின் குமிழ்களை எடுத்து, அதற்கு மின் இணைப்பை வழங்கிய போது மின் குமிழ் எரிவதைக் கண்டு ஆச்சரியப்பட்டுளளனர். அது தொடர்ந்தும் எரிந்தும் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பல பொருட்களில் இந்தோனேஷியா என பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் சாதாரண அளவு தேங்காய்களை விட இவை நீளமாகவும் விசித்திரமாகவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ப)


### தொடர்பு கொள்க

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக அமைக்கப்பட்டு வரும் இடைத்தங்கல் முகாம்களில் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் முன்வந்துள்ளது.

கிணறுகள் அமைத்துக் கொள்ள வேண்டியவர்கள் யாழ்ப்பாணம் - றக்கா வீதியிலுள்ள தமது நிறுவன அலுவலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ப-49)




## வீடும் வீட்டினாற் கிடைக்கும் நற்பேறும்



ஒவ்வொருவருக்கும் அமையும் வீடு ஒழுங்கூரகவும். சிறப்பாகவும் நன்முறையில் அமைந்தால்தான் அந்த வீடு நற்பேறு கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இதனை நன்கு உணர்ந்தே நம் ஆன்றோர் ஒரு வீட்டினை அமைக்கும்போது முதலிற் படியை வைத்துள்ளனர்.

இந்தப் படியில் காலடி வைத்து ஏறும்போது நல்ல ஞான நூல்களைப் படிக்கவேண்டும். அதன்மூலம் நல்ல அனுபவங்களை வாழ்க்கையிற் பெறவேண்டும் என்று கூறப்படுகிறது.

அடுத்தபடியாக நடை. இந்த நடையானது நாம் கற்றபடி நடக்கவேண்டும் என்பதைக் கூறுவதாயுள்ளது. இதற்கடுத்த படியாக அமைவது கூடம். அதாவது நேரம் கிடைக்கும்போது ஒன்று கூடவேண்டிய இடமாகும்.

இவ்விதமாகப் படி, நடை, கூடம் என்பவற்றின் ஒழுங்கில் படித்து, நடந்து, ஒன்றுகூடிச் சாமி அறையில் வழிபாடு செய்து, சமையல் அறையில் உணவு சாப்பிட்டு வீட்டின் வெளியே வரும் போது முன்னே இருப்பது முற்றம்.

வீட்டின் வசதிகள் ஒழுங்காகப் பு,ரணமாகக் கிடைத்தாற் பலன் வீடுபேறு ஆகும். இந்த வீடுபேறு கிடைப்பதற்கு அதற்கேற்ற ஒழுங்கான வீடு நமக்கு அமைவது அவசியமன்றோ. எனவே வீடுபேறு அடையும் நல்வழியைக் காண்போமாக.

*நீர்வைமணி.*

## தாயா? தாரமா?


பெண் இனத்தின் பலவீனம், தான் யாரையாவது சார்ந்திருக்க வேண்டுமென்ற அடிப்படை இயல்புதான். துரதிஷ்டவசமாக இதற்குப் பலியாடு ஆகிறான் ஆண்மகன். நடுவே இருந்து கொண்டு ஆணமகனானவன் தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய அன்புத் தாயைச் சமாளிப்பதா? அல்லது தனது இன்பம், துன்பம் இரண்டிலும் பங்குகொள்ள வந்திருக்கும் மனைவியைச் சமாளிப்பதா? என்று குழம்புகிறான். பெண் இனம் தானே விட்டுக் கொடுக்காத பண்புடையது. இதனால் தாய்க்கும் - மனைவிக்கும் இடையில் பலத்த போட்டி.

வீடு தோறும் வாசற்படியாக மாமியார் - மருமகள் சண்டை ந'தர்சனமாகிவிட்டது. மகன'ன் அன்பில் சற்றேனும் குறை ஏற்பட்டால் விட்டுக் கொடுக்காத தாயும், தன் கணவன் தனக்கு மட்டும் என மார்தட்டிக் கொள்ளும் ம்னைவியும் போட்டி காரணமாக ஏற்படும் பொறாமையினால் அடிக்கடி வாக்குவாதங்களும், நச்சரிப்புக்களும் தலைவிரித்தாடுவது சகஜம்.

தாயின் குறையைத் தாரம் சுட்டிக்காட்டுவதும், தாரத்தின் குறையை தாய் சுட்டிக்காட்டுவதும் இன்று தவிர்க்கமுடியாத எரிச்சலையூட்டும் விடயமாகவுள்ளது. ஆண மகனுக்கு தான் எந்தப்பக்கம் தலை சாய்ப்பது என்ற பிரச்சினை சதா எழுவது இயல்பு.

*இந்தகையோருக்கு பின்வரும் ஆலோசனைகள் பொருத்தமாக அமையும்.*

அதாவது பெற்று வளர்த்த தாய் தன் உயிரைப் போன்றவள். தன்னையே நம்பி வந்துள்ள தாரம் தன் உடலைப் போன்றவள். மொத்தத்தில் இருவரும் இரு கண்கள் என எவ்வொரு ஆண்மகனும் உணர வேண்டும். இந்த இரு கண் க...யும் கலக்கமின்றி வசீகரிப்பது அந்த ஆண்மகனின் கெட்டித்தனத்தில் தான் தங்



கியுள்ளது. அதாவது ஆண் மகனின் பலவீனம்தான் மாமி -மருமகள் பிரச்சினைக்கே மூல காரணம் எனலாம்.

இந்த மகாபெரிய பிரச்சினைத் தீர்ப்பது மிகவும் சுலபமான காரியம்தான். அன்புக்காகப் போட்டியிட்டுக்கொண்டிருக்கும் இருவரையும் அதாவது தாயிற்காகத் தாரத்தையோ, தாரத்திற்காகத் தாயையோ இழிவுபடுத்தி வெறுத்து ஒதுக்கக்கூடாது. இந்தப் பலவீனமான செயலைச் செய்பவன் மனித உருவில் மிருகம். தாய் என்பவள் தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய புனிதப் பெண். அவள் நீண்டகாலம் தன்னோடு இருப்பது நிச்சயமில்லை. அதே மாதிரித்தான் தாரமும் உயிருள்ள வரைக்கும் தன்னைக் காப்பவள்.

எனவே இரு பெண்களையும் ஆண்மகன் விட்டுக் கொடுக்கவோ, பக்கச்சார்பு பார்க்கவோ கூடாது. இவ்வாறு பக்கச்சார்பு பார்ப்பதனால் தன் வாழ்வு பூராகவும் பிரச்சினை தீராது. எனவே இந்த விஷயத்தை ஆண்மகன் என்றுமே நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தாய்க்கும் தாரத்துக்கும் தன் அன்பு சரிசமனானது என்பதை அடிக்கடி ஆண்மகன் காட்டிக் கொள்ளத் தவறக் கூடாது.

நீங்கள் இருவரும் இல்லையென்றால் நானும் இருக்க மாட்டேன் என அடிக்கடி கூறிக் கெள்ளுங்கள். உங்கள் மனைவிக்கு ஏதாவது புதிதாக வாங்கிக் கொடுப்பதென்றால் அதை தாயிடம் காட்டிவிட்டுக் கொடுங்கள். உங்கள் மனைவியுடன் எங்கு செல்வதானாலும் நாசுக்காகவாவது தாயையும் அழைத்துப் பாருங்கள். அன்புக்காக தாயையும், தாரத்தையும் சமாளிக்கப் பொய் பேசுங்கள். தன் தாயின காரணமாக மனைவி மீது அனபு அதிகரித்ததென்றும், மனைவியின் காரணமாக தாயின மீது அன்பு அதிகரித்ததென்றும் பொய் கூறிக்கொள்வதில் பாவமே இல்லை.

இவ்வாறு பொய் கூறுவதன் மூலம் மாமியார் -மருமகளுக்கிடையும் ஒரு ஒற்றுமையும், மதிப்பும், அன்பும், புரிந்துணர்வும் ஏற்படுகின்றது. தான் தன் மருமகளுக்கு எவ்வளவு கொடுமைகள் செய்தும் அவள் என்னைப் பற்றி எவ்வளவு நன்றாக மகனிடம் கூறியிருக்கி றாள என்றும், தான் எவ்வளவு மோசமாக மாமியாருடன் நடந்து கொண்டும் தன்னைக் கணவனிடம் காட்டிக்கொடு க்கவில்லையென்று மனைவியும் உணர்ந்து சந்தோஷப்படுவார்கள்.

அன்பில் ஏதேனும் குறைகள் தென்பட்டால் மாட்டிக் கொள்வது ஆண்மகனே. மனைவியையும், தாயையும் திருப்திப் படுத்த ஒரு ஆண் மகன் பொய் பேசுவது நியாயம்தான். வேறு என்ன செய்ய, வீட்டை அமைதியாக நிர்வகிக்கும் பொறுப்பு ஆண்களின் கையில் தான் வழங்கப்பட்டுள்ளது. இதை மீறியும் மாமியார் - மருமகள் பிரச்சினைகள் ஏற்பட்டால் இது ஆண்மகனின் பலவீனமேயன்றி வேறில்லை. சுவர்க்கம் தாயின் காலடியின் கீழ்தான் உள்ளது. மனைவியின் காலடியில் அல்ல.

எனவே அந்தத் தாயின மனம் நோகாது நடந்து கொள்ளுங்கள். உலகில் நாம எந்தத் தவறைச் செய்தாலும் இறைவன் மன்னித்து விடலாம். ஆனால் பெற்றோருக்குத் துன்பம் இழைத்தவனின் வாழ்வு இன்றும் என்றும் சோதனைக் குரியதாகவே இருக்கும்.

## நீரிழிவு ஒரு நோயல்ல...!



நீரிழிவு நோய் (Diabetes) பரம்பரையாகத் தொடரக்கூடிய விஷயம் என்பதால் எதிர்காலச் சந்ததியினரைப் பாதுகாக்கும் பொறுப்பு குடும்பப் பெண்களின் கைகளில் உள்ளது.

நீரிழிவு ஒரு மாற்றமுடியாத நோய் எனப் பலரும் அச்சம் கொள்கின்றனர். உண்மையில் சீனியின அளவு குறைதல் அல்லது கூடுதல் என்பது குறைபாடே தவிர நோயல்ல. மேலும், நீரிழிவு பாதிப்புக்குள்ளானவர்கள் நோயாளிகளும் அல்லர். இதன் தாக்கத்துக்குள்ளானவர்கள் உடற்பயிற்சிகள், கட்டுப்பாடான உணவு முறைகள், மருந்துகள் மூலம் நீரிழிவை கட்டுப்படுத்தி நீண்டகாலம் வாழலாம்.

அடிக்கடி சிறுநீர் கழிதல், விரைவாக எடை குறைதல், உடல் இளைப்பு, தாகம், அதிக பசி, காயங்கள் மாறுவதற்கு அதிக நாட்கள் எடுத்தல், பார்வை மங்குதல் போன்றவை நீரிழிவு நோயின் அறிகுறிகளாகும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நரம்புகள் பாதிக்கப்பட்டு கை, கால்களில் வேதனை உணர்வு, மாதவிடாய் பிரச்சினைகள் ஏற்படுத்துவதுடன் பக்கவாதம், இதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. நீரிழிவு நோயாளிகளில் குறிப்பிட்ட வகையினரை உணவு முறையாலேயே ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும். உணவில் அரிசி, கோதுமையின் அளவைக் குறைத்து மரக்கறிகளை அதிகமாக சேர்த்துக் கொள்ளவேண்டும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் பின்வரும் மாதிரி உணவுப்பட்டியலை பின்பற்றுவது நன்மையளிக்கும்.

| உணவு வேளை | உணவு வகைகள் |
|---|---|
| காலை | 200ml தேனீர்/கோப்பி சீனி சேர்க்காமல் ஆடையிலலாத பாலுடன |
| காலை உணவு | 3துண்டு பாண் /3 இட்லி/2 தோசை/ 2ரொட்டி /1 1/2 கப் உப்புமா/ 1/2 கப் தக்காளி/ 1 கப் சாம்பார் |
| முற்பகல் | 200ml மரக்கறி சூப்/200ml மோர் /200 ml எலுமிச்சைச்சாறு /1 கப் மரக்கறி சலட்/ 2 பிஸ்கட் (இனிப்புச்சுவை இல்லாத) |
| மதிய உணவு | 1 1/2 கப் சோறு / ஆட்டாமா ரொட்டி 2/ 1/2கப் சாம்பார், 1/2 கப் ரசம், 1கப் மோர், கீரை, மரக்கறி வகைகள் |
| மாலை சிற்றுண்டி | 1/2 கப் அவல்/ சுண்டல் /2 பிஸ்கட் (இனிப்புச்சுவையில்லாத) 200 ml தேனீர் /கோப்பி சீனியில்லாமல் ஆடையில்லாத பாலுடன் |
| இரவு உணவு<br>படுக்க முன் | 3இடியப்பம்/2தோசை/3இட்லி 1 கப் சாம்பார், மரக்கறி வகைகள்,<br>200ml ஆடையில்லாத பால் (சீனி சேர்க்காமல்) |

## சமைத்துச் சுவைப்போம்

### அப்பிள் அல்வா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| அப்பிள் துருவியது – | 1/2kg |
| கோதுமை மா – | 1/2kg |
| நெய் – | 250g |
| ஏலக்காய்த்தூள் – | சிறிதளவு |
| சீனி – | 1kg |
| பால் – | 1/2 போத்தல் |
| கஜு – | 200g |
| கேசரிப்பவுடர் – | சிறிதளவு |

***செய்முறை:***

பாலில் துருவிய அப்பிளைப் போட்டு வேகவிடவும். நன்கு வெந்தபிறகு கையினால் மசிக்கவும். இதனுடன் கோதுமை மாவைக் கலந்து கரைத்து கேசரிப்பவுடன் சேர்த்துக்கிளறவும். சீனியையும் கலந்து சற்று இறுகியதும் நெய்யை சிறிது சிறிதாக கலந்து கிளறவும். அல்வா பதம் வந்ததும் கஜு, ஏலக்காய்த்தூள் சேர்த்து இறக்கி விடவும். இது சுவையாக இருக்கும். உடம்புக்கும் சத்தானதாகும்.

# தூங்கிக்கிடந்த தமிழினத்தை துடித்தெழச் செய்தவர் அறிஞர் அண்ணா

காஞ்சி நடராசனுக்கும், பங்காரு அம்மையாருக்கும் 15-09-1909 அன்று தோன்றிய அறிஞர் அண்ணா 03-02-1969 இல் தனது அறுபதாவது அகவையை எட்டும்போது நம்மைவிட்டுப் பிரிந்தார்.

ஹிந்தியெனும் புற்றுநோய தமிழினத்தைத் தாக்குவதை எதிர்த்துப் போரிடடு பெரு வெற்றி கண்ட அறிஞர் அண்ணா தன்னைத் தாக்கிய புற்றுநோயிடம் தோல்வி கண்டார். தமிழக மக்கள் அவர் மீது எவ்வளவு அன்பை வைத்திருந்தனர் என்பதை அவர மறைந்தபோது அவர்கள் துடிதுடித்து ஐயோ! என்று அலறிய காட்சி சான்று கூறும்.

'கற்றாரைக் கறறாரே காமுறுவர்' என்பது முதுமொழி. ஆனால், அண்ணாவின் சிந்தனையும், பேச்சும், எழுத்தும் தமிழகத்தின் கற்றாரை மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்தின் கறறாரையே திகைப்படையச் செய்தது. எனவே தான், அண்ணாவின் கன்னிப் பேசசினை செவிமடுத்த நேரு *'இவர் தம் வருகை வரவில் வைககபபட வேண்டியதாகும்'* என்று கூறிச்சென்றார்.

### குறுகியகால ஆட்சியில் ஈட்டிய இணையற்ற வெற்றிகள

அண்ணா ஏறக்குறைய 40 ஆண்டுகள் தமிழக அரசியலில, சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதலை உருவாக்கியவர். அவர் முதலமைச்சராக 23 மாதங்கள் தான் இருக்கமுடிந்தது. புற்றுநோய் அவரை முற்றுகையிட அவரது வாழ்வு முடிவுற்றது. எனினும் அவர் பதவிவகித்த 23 மாதங்களில் எம் வழித்தோன்றல்கள் அவரை என்றும் நினைத்துப் பார்க்கின்ற முறையில் வரலாறு வாழ்த்துகின்ற வகையில் தமிழனின் தன்மானம் காக்கவும், அவனின் தனித்துவத்தை நிலைநாட்டவும், தன்மானத் திருமண முறையை (சுயமரியாதை திருமணத்தை) சட்டமாக நிறைவேற்றினார்.

ஹிந்தியை உள்ளடக்கிய மும்மொழித் திட்டத்தை முறியடித்து இருமொழித் திட்டத்தைக்கொண்டு வந்து தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கவும் பக்கத்துணையாக ஆங்கிலம அமையவும் வழிவகுத்தார். சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரா சூட்டி தமிழனுக்கு ஒரு நாடு உண்டு. அங்கு பேசப்படும் மொழி தமிழ். அங்கு வாழ்பவர்கள் தமிழர்கள். அவர்கள் ஆளும் மொழி தமிழ் என்பதை உலகுக்கு பறை சாற்றினார்.

ஆட்சிமொழி தமிழாக இருக்கவேண்டுமென்பதை வற்புறத்திய அண்ணா பயிற்சி மொழி தமிழாக இருந்தால்தான் ஆட்சி மொழி தமிழாக மலர முடியும் என்பதை உணர்ந்து தமிழை பயிற்சி மொழியாக்கப் பாடுபட்டார். அவரின் தமிழ் உள்ளத்தை பின்வரும் கூற்று எடுத்துக்காட்டுகிறது.

**அறிஞர் அண்ணாவின் 36ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

*'தமிழில் பாடமொழி இருக்க வேண்டும் என்று சொல் வது இந்த நாட்டில்தான் தேவைப்படுகிறது. ஆங்கில நாட்டில் ஆங்கிலம்தான் பாடமொழி என்று சொல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை. எந்த நாட்டிலும் இல்லாத விந்தை இங்கேதான் இருக்கின்றது.*

*தமிழில் கற்பிக்கலாமா? என்னுங் கேள்வியும், முடியுமா? என்னும் எதிர்ப்பும், 'பார்க்கலாம்' என்னும் சந்தேகமும், தமிழ் மொழிப் பயிற்சி பெறுபவர்கள் என்ன ஆவார்கள். இதுவரை பெற்றவர்கள் என்ன ஆனார்கள்? என்று இந்நாட்டிலேதான் பேசப் படுகிறது'* என்று அவர் கூறிய கூற்று ஏற்ற முறையில் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க முடியவில்லையே என்ற அவருக்கிருந்த ஆழ்ந்த கவலையை எடுதது்க்காட்டுகிறது.

### ஈழத்தமிழர்க்காக அன்றே குரல் எழுப்பியவர்

தமிழகத்தின் தலைவர்களில் ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் சிக்கலையொட்டி இன்று நேற்றல்ல; அன்றே பிரச்சினையை ஆழமாக அறிந்த நிலையில் அறிவு நிலையிலும், உணர்வு நிலையிலும் ஈழத்தமிழருக்காக குரல் எழுப்பியவர் நம் அண்ணா.

இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு அரசியல் அநாதைகளாக்கப்பட்டபோது சிங்கள அரசின் இனவெறிப் போக்கினை அண்ணா கடுமையாகச் சாடினார். 'சிறிமாவோ சாஸ்திரி' ஒப்பந்தத்தின் கீழ் ஐந்தரை இலட்சத்திற்கு மேற்பட்ட இந்திய வம்சாவழி மக்களை இந்தியாவிற்கு அனுப்ப அன்று ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசு முயன்றபோது. அக்கொடிய செயலைக் கண்டித்தவர் நம் அண்ணா.

ஈழத்தமிழர் மீது 1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டம் திணிக்கப்பட்டபோது அதை எதிர்த்து ஈழத்தமிழர்கள் தொடர்சசியாகப் போரிட்டபோது வெறிகொண்ட சிங்களக் காடையர்கள் தமிழ் மக்களைத் தாக்கி இனப்படுகொலை செய்ய முயன்றபோது ஓங்கிக் குரலெழுப்பினார். தமிழக சட்ட மன்றத்திலும், டில்லி மாநில அவையிலும் அவர் ஆணித்தரமாக்க் கூறிய கருத்துக்களை சட்டமன்றப் பதிவேடுகளிலும் மாநில அவைப் பதிவேடுகளிலும் காணலாம்.

### கவிஞர் வேழவேந்தன் வாழ்த்தும் அண்ணா

அண்ணாவின் உணர்வில் ஊறிய நம் கவிஞர் வேழவேந்தன் ஈழத்தமிழர் நிலையைப் பற்றி எம்மை அப்படியே ஆட்கொள்ளுகின்ற முறையில் பின்வருமாறு பாடிச் சென்றுள்ளார்.

'தாய்நாட்டு தமிழனுக்கோ இந்தித் தொல்லை;
தணல் போன்று சிங்களமோ உனக்குத் தொல்லை!



நாய்வாழ்வு வாழுதடா தமிழ்ச்சாதி
நாகரிக முதல் மனிதன் நீயா? வெட்கம்!
ஓய் தமிழா! உலகத்து ஐ.நா.மன்றில்
உனக்காக வாதாட ஒருவர் தேவை!
பாய்போட்டே உறங்கியது போதும்!
– இன்றே
பாழ்விழியைத் திறந்து விட்டுக்
கழுவாய தேடு'

ஆம், கவிஞர் வேழவேந்தன் கூறுவதற்கமைய உலகத்து ஐ.நா. மனறத்தில், தமிழனின் அழிவைத் தடுக்கின்ற குரல் ஓங்கி ஒலிக்கச் செய்யவேண்டியது தமிழகத்தின் தலையாய கடமை. *'பாய் போட்டே உறங்கியது போதும் இன்றே பாழ்விழியைத் திறந்து விட்டுக் கழுவாய் தேடு'* என்ற வேழவேந்தன் கூற்றுக்கு நாமும் வழிமொழி கூற விரும்புகின்றோம்.

அறிஞர் அண்ணா இன்று உயிருடன் இருந்து தன் தலையை அசைத்தால் ஆயிரம் படைகள் கூடுவது உறுதி. அண்ணா நா அசைத்தால் அணுவெல்லாம் வீரம் பாடும். அண்ணா கண் அசைத்தால ஆதிக்கம் அசைந்தே ஆடும். அன்னவர் விரல் அசைத்தால் அடுபகை நடுங்கி ஓடும். அத்தகைய அண்ணா எம்மிடம் இன்று இல்லை. எனினும் அண்ணாவின் அருமைத் தம்பிமாாகள் என்று உரிமை கொண்டாடுகின்ற தம்பிமார்கள் அண்ணாவின் சிந்தனை வழி செயறபட வேண்டுமெனபதே எமது விருப்பம். □

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் நடாததப்பட்டு வரும வாராந்த நிகழ் தொடரில் நாளை வெள்ளிக் கிழமை முறபகல 10.30 மணியளவில் துணைவியூர் ஆசிரியர் இ.கேசவன் 'வாழ்த்தி வணங்குவோம்' என்னும் பொருள் பற்றி ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ப-35)

## மீண்டும் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்ததங்களால் மீன்பிடி வள்ளங்கள் அனைத்தும் அழிந்துபோன நிலையில் எஞ்சியுள்ள கட்டுமரங்கள் மூலம் மண்பிடித்தொழில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடத்தனை, மணற்காடு ஆகிய பிரதேசங்களில் கட்டுமரத்தில் மீன்பிடி தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ப-35)

## நிர்வாகம் தெரிவு

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை 22இன் புதிய நிர்வாக தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இத்தெரிவில் தலைவராக ந.சுந்தரமூர்த்தியும் உபதலைவராக மு.கருணாமூர்த்தியும் செயலாளராக சி.லோகதாஸும் தெரிவு செயயப்பட்டனர். (ப-74)

## உணவு வழங்கல்

புங்குடுதீவு கனடா வாழ் பழைய மாணவர்கள் ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வட இலங்கை சர்வோதயத்தினால் புதிதாக புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலத்துக்கு ஆதார உணவாக பணிஸ் வழங்கப்பட்டு வருகின்றது. (ப-120)

## நன்கொடை வழங்கப்பட்டது

கோப்பாய் பிரதேச சபை உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் சன சமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களினை தரமுயர்த்தும் நோக்குடன் இது வழங்கப்பட்டுள்ளதாகத தெரிவிக கப்படுகிறது. (ப-74)

# புதிய வருமானவரிச் சட்டம் ஏப்.1இல் இருந்து நடைமுறைக்கு

வடமராட்சி கிழக்கில்

# சேதமான வீடுகளின் விபரங்கள் சேகரிப்பு

# புதிய வருமானவரிச் சட்டம் ஏப்.1இல் இருந்து நடைமுறைக்கு

(கொழும்பு)

புதிய வருமான வரிச்சட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பேராசிரியர் பி.வீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வருமானவரிச் சட்டத்தில் காலத்துக்குக்காலம் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை ஒன்றிணைதது இநதப் புதிய வருமான வரிச்சடடம் உருவாக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள வருமான வரிச் சட்டத்துக்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டே புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த திருத்தங்களை மேற்கொண்டு கோவைப்படுத்துவதற்காக வரி ஆணையாளர்களை பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை நியமதித்துள்ளது.

இந்தச் சபை முதலாவது ஆவணத்தை தற்போது தயாராக்கியுள்ளது. இறுதியான செம்மையான ஆவணத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு அவற்றை சட்டவரையாளர்களுக்கு அனுபபியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரு-8)

வடமராட்சி கிழக்கில்

# சேதமான வீடுகளின் விபரங்கள் சேகரிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் தேசிய வீடமைப்பு உத்தியோகத்தர்களினால் அழிவடைந்த வீடுகளின் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதல் கட்டமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீடமைப்பு திட்டங்கள் மறறும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடன் எடுத்து நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் சேதவிபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந் நடவடிக்கையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப-35)

ஜேர்மன்நாட்டு கியூமெடிக்கா நிறுவனத்தால்

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகளை வழங்க நடவடிக்கை

(மருதங்கேணி)

சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளம், இயந்திரங்களை, மீன்பிடி உபகரணங்களை வழங்க ஜேர்மன் தொண்டமைப்பான கியூமெடிக்கா முன்வநதுள்ளது.

தொண்டமனாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான கரையோரப் பகுதிகளில் அழிந்து போன மீன்பிடித் தளங்களில் ஒரு பகுதியை வழங்க அத்தொண்டர் அமைப்பு முன்வந்துள்ளது.

இத்திட்டத்தில் ஒரு பகுதியான 750 வள்ளங்கள் வழங்கப்படவுள்ளன. இதன் ஓர் அங்கமாக 15 படகுகளை வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசத்திடம் இவ்வமைப்பு ஒப்படைத்துள்ளது.

(ப-35)

# நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

யாழ்.பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் பாவிக்க என கம்பியூட்டர் ஒன்றையும் போட்டோ ஸ்ரட் இயந்திரம் ஒன்றையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளனர்.

(ப-35)

# 1600 அமெ.கடற்படையினர் இலங்கையிலிருந்து வெளியேற்றம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தை அடுத்து இலங்கை வந்துள்ள அமெரிக்க இராணுவத்தினர் தமது ஆரம்பக் கட்டப் பணிகளை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர்.

காலி, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து தாம் கொண்டுவந்த படைக்கலங்களுடன் வெளியேறியுளளனர். இதேவேளை, அமெரிக்காவின் ஏனைய நிறுவனங்களின் பணிகள் தொடரும் என்று அமெரிக்க தூதுவராலய அதிகாரி ஜேம்ஸ் தெரிவித்துள்ளார்.

அவசரகாலத்தில் அமெரிக்கப் படையினர் செயற்பட்ட விதம் குறித்து நாம் பெருமையடைகிறோம. தமது பணியை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார்கள்.

அமெரிக்க படையினர் வடக்கில் மாத்திரம் ஆயிரத்து 800 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளனர். 90 ஆயிரம் கலன் சுத்தமான குடிநீரை வழங்கியுள்ளனர்.

இதுவரை சுனாமிக்காக அமெரிக்க அரசாங்கம் 57.4 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதைவிட அனர்த்த முகாமைத்துவ அமைப்பான யுஎஸ்எயிட் மூலம் 32.8 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரை ஆயிரத்து 600 கடற்படையினர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

எஞ்சியோர் பெப்ரவரி 15க்கு முன்னர் இலங்கையைவிட்டு வெளியேறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ச-6)

# கையளிப்பு

(பொலிகண்டி)

புன்னாலைக்கட்டுவன் தைலங்கடவை பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் கிராம சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து தைலங்கடவை ஞானவைரவர் ஆலய வீதி வரையுமான பிரதேசமே புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராமசேவை அலுவலர் சி.தெட்சணாமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ப-106)

# ஈராக்கில் தாக்குதல் தொடரும்!

# அல்ஹெய்டாவினால் எச்சரிக்கை

(பக்தாத்)

சதாம் ஹுசேன் பிடியில் இருந்து மீட்கப்பட்ட ஈராக், அமெரிக்க இராணுவத்தின் பாதுகாபபிலும், இடைக்கால அரசின் நிர்வாகத்திலும் உள்ளது. இங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடந்தது.

50ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அங்கு இப்போதுதான் தேர்தல் நடந்துள்ளமை தெரிந்ததே.

இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதாக அல்-ஹெய்டா தீவிரவாதிகள் அறிவித்திருந்தனர். இதையும் மீறி யாராவது வாக்களித்தால் அவாகளைக் கொன்று விடுவோம் என்றும் அவர்கள் எச்சரித்து இருந்தனர். வாக்களிப்பு நடந்தபோது, தீவிரவாதிகள் சில இடங்களில் வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

ஆனால் குண்டுவெடிப்புக்கள், வன்முறைகள் மத்தியிலும் ஈராக்கில் 72 சதவீதமானோர் வாக்களித்தனர்.

வெற்றிகரமாக ஈராக்கில் தேர்தல் நடந்து முடிந்ததை உலக நாடுகளும் பாராட்டி உள்ளன. அதேநேரத்தில் 'இது அமெரிக்காவின் விளையாட்டு' என்று தீவிரவாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், 'இஸ்லாம் அல்லாதவர்கள் ஈராக்கைவிட்டு வெளியேறும்வரை எங்கள் தாக்குதல் தொடரும்' என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக ஈராக் இடைக்கால பிரதமர் அயத் அல்லாவி டெலிவிஷனில் பேசுகையில்,


'வாக்களிப்பின்போது நாம் ஒன்றுபட்டு சர்வாதிகாரத்திற்கு முற்றுபபுள்ளி வைத்ததையும், வருங்காலத்தில சன்னி, ஷியா முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், அரேபியர்கள், குர்துகள் மற்றும் துருக்கியர்கள் ஒன்றாக இணைந்து ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்கப் போவதையுமு உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்துவருகின்றன' என்றும் தெரிவித்தார்.

எனவே வன்முறை மூலம் தீர்வுகாண முடியாது என்றும் அவர் தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். (க)

## மேடையில் சரிந்தார் ஹிலாரி! வயிற்றில் வைரஸ் தாக்குதலாம்

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் நடந்த கூட்டத்தில் கிளின்டனின் மனைவி ஹிலாரியின் உடல்நிலை திடீரெனப் பாதித்தது.




அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டனின் மனைவி ஹிலாரி அமெரிக்க செனட் உறுப்பினராக இருக்கிறார். இவர் நியூயோர்க்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கூட்டம் ஒன்றில் பங்கேற்றார்.

பேசிக்கொண்டிருந்தபோது அவரின் உடல்நலம் பாதித்தது. இதனால் பேசமுடியாமல் இருக்கையில் தளர்ந்து அமாந்தார்.

உடனே, டாக்டர்கள பரிசோதித்தனர். வயிற்றில் வைரஸ் தாக்குதல் இருப்பது தெரிந்தது. உடனே முதலுதவி செய்யப்பட்டது. அதன்பின்னர் ஹிலாரி தேறினார். (க)

## நான் குற்றமற்றவன் -மைக்கேல் ஜாக்சன்



(லொஸ் ஏஞ்சலஸ்)

வெறுக்கத்தக்க குற்றச்சாட்டுகள் கூறப்படுவதால் என்வாழ்க்கை துயரம் மிக்கதாக உள்ளது எனப் பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன், சிறுவர்களுடன் தகாத உறவு கொண்டதாக கலிபோர்னியாவில் உள்ள சாந்தா மரியா கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை பாலியல் பலாத்காரம் செய்தது தொடர்பான வழக்குவிசாரணை நேற்று முன்தினம் நடந்தத்.

முன்னதாக மைக்கேல் ஜாக்சன் தன்னுடைய வெப்சைட்டில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடுகையில்,


புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை, குழந்தைகளுக்கான பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த எனது நெவர்லேண்ட் வீட்டுக்கு அழைத்துச் சென்று சந்தோஷப்படுத்தினேன். உடல் நலம் குறைந்த ஏராளமான குழந்தைகள என் வீட்டுக்கு வந்து பல்வேறு மிருகங்களைப் பார்த்தும், விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தியும் மகிழ்ச்சியடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

ஆனால் பேராசை மிக்க இந்தச சிறுவனின் குடும்பத்தினர் என் மீது அபாண்டமாகப் புகார் கூறி என்னைக் களங்கப்படுத்துகின்றனர்.

உண்மை வெளிவரும்போது, நான் குற்றமற்றவன் என்பது நிரூபிக்கப்படும். வெறுக்கத்தக்க வகையில் என்மீது கூறப்படும புகார்களால் என்னுடைய குடும்பததினரும், நானும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளோம் என்று கூறியுள்ளார். (ற)

## தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் ஈராக்கில் தேர்தல் வெற்றிகரமாக நிறைவு

### அமெ. அதிபர் புஷ் புளகாங்கிதம்



(பக்தாத்)

தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இடையே ஈராக்கில் வெற்றிகரமாக தேர்தல் நடந்ததை அமெரிக்க அதிபர் புஷ், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட உலகத் தலைவர்கள பலர் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

தேர்தல் முடிவுக்காக ஈராக்மக்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர். ஈராக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் நடந்தது. தீவிரவாதிகளின் மனித மற்றும் பீரங்கிக் குண்டுத்தாக்குதல்களுக்கு இடையே மக்கள் அச்சப்படாமல் வாக்களித்தனர்.

இந்தியா, அமெரிக்கா உட்பட எந்த நாடுகளிலும் இல்லாத வகையில், தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் ஈராக்கில 72 சதவீத வாக்குகள பதிவாகி இருப்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெற்றிகரமாகத் தேர்தல் நடந்ததை அமெரிக்க அதிபர் புஷ், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் பாராட்டியுள்ளனர்.

தேர்தல் மிகப்பெரிய வெற்றி என்று புஷ் தெரிவித்தார். ஈராக்கில் தேர்தல் நடந்தபோது அதன் நிலவரங்களை வெள்ளை மாளிகையில் அமர்ந்தபடி புஷ் அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார். புஷ் அளித்தபேட்டியில்,

மத்திய கிழக்கின் மையத்திலிருந்து விடுதலைக் குரலை உலகம் கேட்கிறது. ஈராக்கில் வெற்றிகரமாகத் தேர்தல் முடிந்துள்ள போதிலும், தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடரும். ஜனநாயகம் மீதான அவர்களின் தாக்குதலைத் தொடர்ந்து முறியடிக்கவேண்டும். தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல்களுக்கு இடையே அச்சப்படாமல் வாக களித்த ஈராக்மக்களைப் பாராட்டுகிறேன என்றார்.



பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் கூறுகையில்,

ஈராக தேர்தல் வெற்றிகரமாக நடந்திருப்பது, தீவிரவாதத்தின் இருதயத்தில் விழுந்த மரணஅடி என்றார்.

இதேபோல், பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் ஈராக் தேர்தல் வெற்றிகரமாக நடந்ததைப் பாராட்டியுள்ளனர். ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் வெளியிட்ட அறிக்கையில், தேர்தல் வெற்றிகரமாக நடந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஈராக்கில் புதிய ஆட்சி அமையவும், அரசியல் சட்டம் உருவாக்கவும் ஐ.நா. உதவியாக இருக்கும் என்றார். (ற)



ஜம்முவில் நடந்த இடைத்தேர்தலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களது பனர்களை எரித்தனர்.

## சௌகத் அஜீஸ் – மன்மோகன் சிங் எதிர்வரும் 6இல் சந்தித்துப் பேச்சு

(இஸ்லாமாபாத்)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டின்போது பாகிஸ்தான் பிரதமா சௌகத் அஜீஸ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

பங்களாதேஷுக்கான பாகிஸ்தான் தூதர் மன்சர் ஹபீக் இஸ்லாமாபாத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அனைத்து அம்சங்களையும் உளளடக்கிய இருதரப்புப் பேச்சுகள், பக்லிஹார் நீர்மின்திட்டம், ஈரான் - பாகிஸ்தான் - இந்தியா எரிவாயுக் குழாய்ப் பாதை அமைப்புத் திட்டம் ஆகியவை குறித்து பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் மேற்படி சந்திப்பில் விவாதிக்கவுள்ளனர். (ற)

# சுனாமி ஆழிப் பேரலைத் தாக்கத்தினால் பறங்கியர் சமூகத்திற்கு பலத்த பாதிப்பு

## இழப்புகளிலிருந்து மீள 10வருடங்கள் தேவை எனவும் தகவல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் அண்மையில் ஏற்பட்ட உயிரிழப்புகளை மாவட்ட இன விகிதாசார ரீதியாக நோக்கும் போது பறங்கியர் இனம் கூடுதலாகப் பாதிககப்பட்டுள்ளதாக அந்த சமூகம கூறியுள்ளது.

இம் மாவட்டத்தில் உயிரிழந்துள்ளோரின் எண்ணிக்கை 3432 ஆகும். அதாவது தமிழர்கள் 3162, முஸ்லிம்கள் 118, பறங்கியர் 156, இத்தொகை முறையே அந்த இனங்களில் 0.79 வீதம் 0.08 வீதம் மற்றும் 5.57 வீதம் என இந்த தொகை அமைகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட இன விகிதாசாரத்தில் 0.48 வீதத்தை பறங்கியர் கொண்டிருப்பதால் தான் உயிரிழப்பு வீதம் அந்த இனத்திற்கு கூடுதலாக ஏற்பட்டுள்ளது. இவர்கள் மிகச் சிறிய தொகையினராக இருந்தாலும் இந்த உயிரிழப்பு விகிதத்தைப் பொறுத்த வரை அந்த இனத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு பறங்கியர் சமூகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாவட்டத்தில் தமது இனத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களில் 3000 பேர் வரை இருக்கின்றார்கள். சுனாமியினால் 155 பேர் வரை உயிரிழந்துள்ளார்கள். 290 குடும்பங்கள் பாதிக்கப்படடுள்ளன. 220 குடும பங்கள் இருப்பிடங்களை இழந்துள்ளன. 90 சத வீதமானோர் தொழில் உபகரணங்களை இழந்துள்ளார்கள். இதன்படி 58 சத வீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

நத்தார் பண்டிகையை இம் முறை வெகு விமரிசையாகக் கொண்டாடிய மறுநாள் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் பிரதான குடியிருப்பு தளமான டச்பார் கிராமம் தரை மட்டமாகியது. இதன் காரணமாகவே இந்த இனத்திற்கு கூடுதலான இழப்புகள் எற்பட்டுள்ளது. இந்த குடும்பங்கள் அனைத்தும் தற்போது புனித சிசிலியா மகளிர் பாடசாலையில் அகதிகளாக வசிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு பறங்கியர் சமூகத்தின் தலைவர் சனி ஒக்கர்ஸ் இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிகையில்,

தமது சமூகத்திற்கு ஒரே தடவையில் ஏற்பட்ட இந்த உயிரிழப்புகள் மாவட்ட இன விகிதாசாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். தச்சு, வெல்டிங், மெக்கானிக் போன்ற துறைகளில் சுயதொழில்களில் திறமை மிக்கவர்களான எமது சமூகத்தவர்கள் கல்வியிலும் முன்னேற்றமடைந்து பல்கலைக் கழகம் சென்று உயர் கல்வி கற்று வருகின்றார்கள். எதிர்பாராத வகையில் எமது சமூகத்திற்கு ஏற்பட்ட இந்த தாக்கத்திலிருந்து வழமை நிலைக்கு திரும்ப குறைந்தது 10 வருடங்களாவது எடுக்கும் என்றார். (ப)

## ஜே.வி.பியின் நடவடிக்கைக்கு பத்மநாதன் எம்.பி. கண்டனம்

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடந்த கூட்டத்தில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தபிய திஸ்ஸ அத்து மீறி நுழைந்தமை கண்டிக்கத் தக்க விடயம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நிலையில் எமது பிரதேசத்துக்குள் இவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட சம்பவம் குறித்தும் கவலை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த நிவாரணப் பணி என்ற போர்வையில் நுழைந்த இவவாறான சக்திகள் கிழக்கைத் துண்டாட வேண்டும் என்ற பிரசாரங்களையும் மக்களிடையே பிரசாரப்படுத்தி வருவதாக அவர் கவலை தெரிவித்தார். (ப)

## இவ்வார முடிவுக்குள் சகலவித நிவாரணங்களையும் வழங்குக!

### ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு

(கொழும்பு)

கடற் பேரலைகள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் இந்த வாரம முடிவடைவதற்கு முன்னர் சகல வித நிவாரணங்களையும் வழங்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, அத்தியாவசியத் தேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலாளர்கள் உட்பட சகல அதிகாரிகளுக்கும இதுகுறித்த பணிப்புரைகள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இவைதவிர பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்ற சுற்றுநிருபமும், திறைசேரியினால் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2 ஆயிரத்து 500ரூபா அலவன்சும் 375ரூபா பெறுமதியான உலர் உணவுப பொருட்களையும் வழங்குவதற்கு 12பில்லியன் ரூபா தேவைப்படும் எனவும் திலக்ரணவிராஜா மேலும் கூறினார். (க-60)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிதிஉதவி வழங்கலில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக இது வரை உதவியளித்த நாடுகளில இந்தியா முன்னணியில் உள்ளது. அடுத்த நிலையில் ஜப்பான் உள்ளது.

ஆகக்கூடுதலான தொகையாக இரண்டாயிரத்து 724 கோடி ரூபாவை இந்தியாவே வழங்கியுள்ளது. இரண்டாவது நிலையில் ஜப்பான் இரண்டாயிரத்து 560 கோடி ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளது.

மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ புள்ளி விவரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. ஆழிப் பேரலை அனர்த்தத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் இழப்புகளும் சுமார் 13 ஆயிரம் கோடியிலிருந்து 15 ஆயிரம் கோடி ரூபாவரை இருக்கலாம் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் நிறுவனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் இநதியா, ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் என்பன 13 ஆயிரத்து 694 கோடி ரூபாவரை வழங்கி உதவ முன் வந்துள்ளன.

இதுவரை கிடைத்த தகவல்களின்படி இந்தியாவே ஆகக் கூடுதலாக வழங்கியுள்ளது. அமெரிக்கா 134 கோடி ரூபா, நோர்வே 115 கோடி ரூபா, ஐரோப்பிய ஒன்றியம் ஆயிரத்து 400 கோடி ரூபா என வழங்கியுள்ளன. மேலும், உதவிகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

## தொழிற் பயிற்சி

(பொன்னாலை)

சணடிலிப்பாயில் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் மின்னிணைப்பு, மேசன், தச்சு வேலை போன்றவற்றில் பயிற்சிகளைப்பெற விரும்புபவர்கள் தங்கள் பெயர் விபரங்களை உடன் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்பவர்கள் 16வயதிற்கு மேற்பட்டவராயும் 8ஆம் தரத்திற்கு மேல் பயின்றவராகவும் இருத்தல் வேண்டும்.

இவர்களுக்கான பயிற்சி நெறி 6மாத காலத்திற்கு நடைபெறும். பயிற்சிக் காலத்தின் போது 450ரூபா ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் வழங்கப்படுமென்றும் பயிற்சிக்கான பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் தெரிவித்துள்ளார். (ற-49)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு!

(யாழ்ப்பாணம்)

யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலய இல்ல மெயவல்லுநர் திறனாய்வு இன்று மு.ப.10.00மணிக்கு அதிபர் ந.கலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வே.மகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைககழக புவியியல்துறை தலைவா கலாநிதி கா.குகபாலனும் சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதன், முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.புவனேந்திரன், வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், ஓய்வுபெற்ற அதிபர் சு.யோ.பூராசா, யாழ.போதணாவைத்தியசாலை தாதியர் பயிற்சி கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.வில்வநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-126)

## கோதுமை மாவின் விலைகுறையும்

(கொழும்பு)

அரசாங்கம் இறக்குமதிசெயதுள்ள கோதுமை மாவை சந்தை விலையைவிட கிலோவுக்கு ஒரு ரூபாய்ப்படி, குறைந்த விலையில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக வாத்தக நுகர்வோர் விவகார அமைசசர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் கிலோவுக்கு 7.50சதப்படி பிறிமா மாவுக்கு வழங்கப்படுகின்ற மானியம் இரத்துச் செய்யப்படுமாயின் கோதுமை மாவின் விலையை மேலும 1.50சதத்திற்கு குறைக்க முடியும் எனவும் அவர்மேலும் கூறினார். (க-60)

## சட்டவிரோத மின் பாவனை

வடமராட்சிப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெறுவோரினால் மின்பாவனையாளர்கள் பலத்த இன்னல்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அல்வாய் வடக்கு மறாம்புலம, அல்வாய் வடமேற்கு ஆகிய பகுதிகளில் திருட்டு மின்சாரம பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாக அப்பகுதிகளைச் சேர்ந்த மின் பாவனையாளர்கள் இலங்கை மின்சாரசபையின பருத்தித்துறை அலுவலகத்தில முறைப்பாடு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் மின்சார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-48)

## நிர்மாணம்

அராலி கிழக்கு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக மணிக் கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இக்கோபுர வேலைகள் இம் மாதம் முற்பகுதியில் நிறைவுறும் என்றும் அதற்கான குடமுழுக்கு அபிஷேகம் வெகு விரைவில் நடைபெறும் என்றும் ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். (ப-49)

### சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மீனவர்களுக்கு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 300 படகுகளை வழங்கியது

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களை மீளவும் தங்கள் வழமையான வாழ்வுக்குள் திருப்பும் முதற்கட்ட நடவடிக்கையாக, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 300 படகுகளை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வடமராட்சி ஆகிய மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முற்றாகப் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு தொழிலை ஆரம்பிக்கும் வகையில் இந்தப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மீளவும் தொழிலுக்குத் திரும்பும் திட்டம் என்ற திட்டமொன்றை அறிமுகம செய்துள்ள புனர்வாழ்வுக் கழகம், பழுதான படகுகள், வலைகள் மற்றும் கடற்தொழில் உபகரணங்களைத் திருத்தும் ஆலைகளை உருவாக்கி வருவதாகவும் தெரியவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் படகுகளைத் திருத்தும் அதேவேளை, புதிய படகுகள், கட்டுமரங்களை உருவாக்குவதுடன், புதிய வலைகள், தூண்டில்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை உருவாக்குவதும் அடங்குகின்றன. (ப)

## இணைந்து செயற்படுவது குறித்து அரசும்-புலிகளும் தீவிர ஆலோசனை

### நோர்வே அரசு தகவல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுனாமி நவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் இணைந்த ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த இரு தரப்பினரும் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

வட-கிழக்கில் நிவாரணப் பணிகளை இணைந்து மேற்கொள்ள விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஆலோசிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்கவிற்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் வடார் ஹெல்கசன் மற்றும எரிக் சொல ஹெய்ம் ஆகியோருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விபரம வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

கிழக்கு மாகாணத்தில் சுனாமியினால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தக் கட்டமைப்பில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் உள்வாங்கப்பட்டால் நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடியும் என்ற யோசனையை எதிர்க் கட்சித் தலைவர் முன்வைத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் சமாதானப் பேச்சு வார்த்தையில் தற்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலை, எதிர் காலத்தில எதிர் நோக்க வேண்டியிருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் ஆராயப்பட்டதாகவும் அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ப)

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு - குறள்

வலம்புரி

# ஜே.வி.பியின் கையாலாகாத்தனம்

நிவாரணம் என்ற பெயரில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆழிப்பேரலையை அடுத்து வெளிநாடுகளிலிருந்து வருகின்ற நிவாரணங்களோடு விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி தனது மனப்புளுக்கத்தை திருப்திப்படுத்திக் கொள்வதற்காக சர்வதேச சமூகத்தின் மீதும் எரிந்து விழுந்துள்ளது.

ஆழிப்பேரலை, பேரழிவை ஏற்படுத்திய இந்நேரத்தில் உலகநாடுகள் எல்லாம் நிவாரணப் பணிகளில் அக்கறைகொண்டு செயற்படுகின்றபோது ஜே.வி.பி மட்டும் தமது பேரினவாதத் தீயை மூட்டிவிடுவதிலேயே கண்ணும்கருத்துமாக இருக்கின்றது என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இலங்கை அரசுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் செய்த பொய்ப் பிரசாரங்கள், அதனால் அந்நாடுகளின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட தளம்பல்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டின் மூலம் குறைவடையத் தொடங்கியது.

எனினும் சமாதான முயற்சியில் விருப்பமில்லாத ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகள் விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை விரும்புபவர்கள் போல பிரசாரம் செய்தன.

பேரினவாதிகளின் இந்தப் பிரசாரங்களை அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டன. ஆயினும் அண்மையில் நடந்த ஆழிப்பேரலையின்போது விடுதலைப் புலிகள் நடந்துகொண்ட முறைமைகள் உலக நாடுகளையே ஆச்சரியப்படவைத்துள்ளன.

இலங்கை அரசின் விசமப் பிரசாரங்களை மட்டும் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் பற்றிய எண்ணக்கருவை நிர்ணயித்துக்கொண்ட சர்வதேச சமூகத்திற்கு ஆழிப்பேரலை தந்த அழிவுகளின் மத்தியிலும் ஓர் உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த உண்மை எதுவெனில், விடுதலைப் புலிகள் உரிமைக்காக போராடுகின்றவர்கள். அவர்கள் யுத்தத்தை விரும்பியவர்கள் அல்ல. அவர்களிடம் இலங்கை அரசு யுத்தத்தை வலிந்து திணித்துள்ளது. ஆழிப்பேரலை ஏற்பட்ட மறுகணத்திலேயே விடுதலைப் புலிகளின் படையணி மேற்கொண்ட மீட்புப் பணி அவர்களின் மனிதநேயத்தின் உச்சத்தைக் காட்டுவதாக உள்ளது.

இந்த உண்மைகளை சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டது. ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுப்பதில் விடுதலைப் புலிகள் செயற்பட்ட வேகத்தை உலக நாடுகளும், சர்வதேச ஊடகங்களும் மனதாரப் பாராட்டியுள்ளனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பற்றிய எண்ணக்கரு மாற்றமுற்று அவர்கள் பற்றிய உண்மைநிலை வெளிப்பட்டதும் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளைப் பாராட்டவும், அவர்களின் ஊடாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் முன்வந்தன.

இவ்வாறு சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள மதிப்பை சகித்துக்கொள்ளமுடியாத ஜே.வி.பி இப்போது புதிய குற்றச்சாட்டாக நிவாரணப் பொருட்களுடன் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. தனது குற்றச்சாட்டை தனித்து புலிகளுடன் நிறுத்திக் கொள்ளமுடியாத ஜே.வி.பி அதற்காக சர்வதேச சமூகத்தையும் தனது குற்றச்சாட்டுக்குள் இழுத்துக்கொண்டு தனது உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

# தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் அமைக்க வெளிநாடுகளிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சுனாமி போன்று திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இநத நிலையம் சர்வதேச மட்டத்தில் செயற்படவுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ படையணியில் முதலாவது அனர்த்த முகாமைத்துவ பாடநெறியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்று உடனடியாக எமக்குத் தேவையாக உள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை நான் இப்போதே முன்னெடுத்துச் செல்கின்றேன்.

இந்த தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு சர்வதேச ஆலோசனைகள் எமக்குத் தேவைப் படுகின்றன. இவ்வாறான ஆலோசனைகளை நாம் வெளிநாடுகளிடம் கோரியுள்ளோம்.

ஜப்பான் மற்றும் அமெரிக்க போன்ற நாடுகளில் காலத்திறகு காலம் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதனால் அந்நாடுகளில் சக்தி வாய் ந்த சுனாமி எதிர்வு கூறல் மத்திய நிலையங்கள உள்ளன.

எனவே அனுபவம் வாய்ந்த இந்த நாடுகளின்தும்ஆலோசனைகள் மற்றும் உதவிகளைப் பெறுவதற்குத் தீர்மானிக்கபபட்டுள்ளது. அமைக்கப்படவுள்ள அனர்த்த நிலையம் சர்வதேச மட்டத்தில் ஒரு மத்திய நிலையமாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடடையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கம் என்ற வகையில் எமக்கு உண்டு. நாம தற்போது நடைமுறைப்படுத்தவுளள 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் கட்டடங்களை அமைப்பதானது மிகக்குறைவானதே. மீண்டும் ஒருமுறை இவ்வாறான அனர்த்தம் ஏற்பட்டால் மேற்படி தூர எல்லையை 100 மீற்றராக ஆக்குமாறு மக்களே கூறுவார்கள் எனறும் குறிப்பிட்டார். (ற-8)

# கரையிலிருந்து 100 மீற்றரில் கட்டட நிர்மாணம்
# அரசின் தீர்மானத்தை மீள்பரிசீலிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் கட்டடங்கள் கட்டப்படுவதற்கு தடை விதிக்கும் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் மீன்பிடித்துறை மற்றும் உல்லாசப் பயணத்துறைக்கு பெரும் பாதகமானதாக இருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனரத்ன மேற்படி தகவலகளை வெளியிட்டார்.

கரையோரங்களில் தடுப்புச்சுவர்களை அமைப்பதன் மூலம் பேரலை அபாயங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, கிரமமான திட்டம் ஒன்றின் பிரகாரம் பாதிககப்பட்ட பகுதிகளில் பட்டினங்களும் கிராமங்களும் மீள அமைக்கபபடும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ற)

# கட்டடப் பொருட்களின் தரநிர்ணயம் அறிமுகம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கைக்கு கட்டடப் பொருட்களை இறக்குமதி செய்யும் போது அவற்றின் தர நிர்ணயத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கட்டடப் பொருட்கள் மற்றும் பலகைகளுக்கான தரங்கள் குறித்த விபரங்கள் இந்த வாரம் வெளியிடப படவுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் கட்டடப் பொருட்களின் தர நிர்ணயங்களை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக வீடமைப்பு நிர்மாணத்துறையின் அமைச்சின் செயலாளர் கூறினார்.

இந்த நடவடிக்கையினை செயற்படுத்துவதன் மூலம் தரம் குறைந்த கட்டடப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தவிர்க்க முடியும் எனவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிர்மாணப்பணிகளுக்கு எதிர்காலத்தில் பெருமளவிலான கட்டடப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதால் தரம்மிக்க பொருட்களை மாத்திரம் இறக்குமதி செய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும தெரிவித்தார். (க-9)

# திட்டமிடல் செயலகம் திறந்து வைப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் பணிகளை மேற்கொள்வதற்காகவும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காகவும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக சுனாமி அனர்த்தச் செயற்பாட்டைத் திட்டமிடும் செயலகம் ஒன்று பருத்தித்துறையில் கடந்த திங்கட்கிழமை பி.ப. 1.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

செயலக இணைப்பாளர் வி.கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினை கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதி குட்டித்தம்பி, போராளி சங்கர், நீலகண்டன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்ட முகாமையாளர், சுனாமி அவசர கால உதவிப்பணிப்பாளர் கரிகரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து செயலகத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் வைபவரீதியாக திறந்து வைத்தார்.

வரவேற்புரையை செல்வன் வி.கவிச்செல்வனும் தலைமையுரையை ஜெயரர்ஜ்ஜும் நிகழ்த்தினர். தொடர்ந்து குட்டித்தம்பி, நீலகண்டன், சங்கர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்க்கழகப் பணிப்பாளர்கள், கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற)

# கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினது மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பல பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கு கொப்பிகள், புத்தகப் பைகள் மற்றும் சில உபகரணங்களை வழங்கவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் கலந்துகொண்டு மாணவர்களிற்கு உபகரணங்களை வழங்கவுள்ளார்.

இவ வைபவம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு ஓட்டுமடம் நிலையப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (ப)

## போலி ஆவணங்களை சமர்ப்பித்து
# மரண அத்தாட்சிப்பத்திரம் பெறுவோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தமைக்கான மரண அத்தாட்சிப்பத்திரங்களைப் பெற முயற்சிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம எச்சரித்துள்ளது.

இது தொடர்பான யோசனை ஒன்று அடுத்த வாரம் அமைசசரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஜோன செனவிரத்தின தெரிவித்துள்ளார். இதன்படி போலியான ஆவணங்களை சமர்ப்பித்து மரண அத்தாட்சிப்பத்திரங்களை பெறமுனைவோருக்கு இரு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்ததாகக் கூறி போலியான ஆவணங்களை சமர்ப்பித்து சிலர் மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற முயற்சித்ததாக தகவல்கள் கிடைத்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தர். (க-9)

## சாயி அருளமுதம்



அன்பின் கோட்பாட்டில் அகம்பாவமோ களங்கமோ துளியும் கிடையாது. தன்னலத்துடன் கூடிய பற்றிலிருந்து அது முற்றிலும் விடுபட்டிருப்பது. சாயி எதைச் சொன்னாலும், சாயி எதை அவதானித்தாலும் அவை யாவும் உங்களுக்காகவேயன்றிச் சாயிக்காகவன்று. உங்களுடைய ஆனந்தமே என்னுடைய அவா. உங்கள் ஆனந்தமே எனது ஆனந்தம். உங்களுடைய ஆனந்தத்தை விட வேறு ஆனந்தம் எனக்கில்லை.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# பெண் அரச ஊழியர்களுக்கு பிரசவ விடுமுறை ஒரு வருடம்

## ஜனவரி முதல் அமுல் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

அரச சேவையில் பணிபுரியும் பெண்களுக்கு பிரசவத்துக்காக ஒருவருட விடுமுறையை வழங்குவதற்கு சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டதாக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

இதற்காக நிறுவனச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்த விடுமுறையை அமுல்படுத்தும் வகையில் இதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச சேவையில் பணிபுரியும் பெண்களுக்கு பிரசவத்துக்காக ஒருவருட விடுமுறையை வழங்குவதற்கான யோசனையை ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் தனது முதலாவது வரவுசெலவு திட்டத்தில் தெரிவித்திருந்தது.

பிரசவத்திற்காக பெண்ணொருவருக்கு சம்பளத்துடன் 84 நாட்கள் விடுமுறையும், மேலும் 84 நாட்கள் அரைமாதச் சம்பளத்துடனும், ஏனைய 84 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையாகவும் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# புலிகள் – இராணுவம் நேற்று யாழில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கும் இராணுவத்தினருக்குமான மாதாந்தச் சந்திப்பு நேற்று யாழ்.மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோரும் படையினர் தரப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன், வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்துவனகுரு, கடற்படையின் உயரதிகாரியும் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சுதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடையாகவுள்ள விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. (ச-8)

# இல்ல மெய்வல்லுனர் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மத்தியகல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ந.சபாரட்ணசிங்கி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

(க-39)

# இலங்கையின் சுதந்திர தினத்தை...

தமிழர்கள் தமது சுதந்திரத்தைப்பெற கடந்த 50 ஆண்டுகளாக போராடுகிறார்கள். போராட்டத்தை அழிப்பதற்காக அவசர காலச்சட்டம், பயங்கரவாதச் தடைச்சட்டம் என்பவற்றை ஏகாதிபத்தியவாதிகள் கொண்டுவந்து தமிழர்களை காரணமின்றி கைதுசெய்து சித்திரவதை செய்தனர், கொலைசெய்தனர், அப்போது இலங்கையின் நீதித்துறையும் துணைபோனது. இதனைத் தமிழர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

சிங்கள ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்திற்கோ எவ்வித அழுத்தத்திற்கோ தமிழினம் ஒருபோதும் அடிபணியாது. தமிழரது வீரமும், தியாகமும் சுதந்திரப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தும்.

தமிழர்கள் தங்கள் சுதந்திரத்தை பறிகொடுத்து பல ஆண்டுகளாகிவிட்டன. தமிழன் தம் சொந்தமண்ணிற்கு செல்லமுடியவில்லை. அவர்களது வீடு வாசல்களில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இலங்கை சுதந்திரம்பெற்ற நாள்தொட்டு சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்கள் நசுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு தமிழ்மண் ஆக்கிரமிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை தமிழ்மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்தக்கொடூரமான சூழ்நிலையில் இலங்கையின் சுதந்திர தினம் தமிழ்மக்களை அச்சுறுத்துவதாக அமைகிறது.

பெப்பிரவரி 4 தமிழ் மக்களுக்கு கறுப்புநாள், துக்கநாள். தமிழனது சுதந்திரத்தை தூக்கிலிட்ட நாள். சுதந்திர தாகம்கொண்ட த்மிழர்கள் இதனை எதிர்ப்பார்கள்

கடந்த மூன்று வருடங்களாக நடைமுறையில் உள்ள போர்நிறுத்த காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களை இனப்பிரச்சினையை தீர்க்காமல் பின்னடித்து வருகிறார்கள். இதனை தமிழ்மக்கள் கவலையுடன் எதிர்நோக்குகிறார்கள். இதுபற்றிய ஆட்சியாளர்கள் நன்கு சிந்திக்கவேண்டும். இந்த சூழ்நிலையில் சுதந்திரதினம் வருகிறது. எமது உணர்வலைகளை இலங்கைக்கும் உலகிற்கும் தெரியப்படுத்துவோம்.

இலங்கையில் சுதந்திரம் தமிழ்மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதனை உலகுக்கு உணர்த்தவே அன்றைய தினத்தை தமிழ் மக்கள் புறக்கணிக்கவேண்டுமென யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது. இதனை ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களும் தம்பகுதியில் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

57 ஆவது சுதந்திரத்தை தமிழர் தாயகம் எங்கும் கறுப்பு தினமாக அனுஷ்டித்து சுதந்திரதினத்தை புறக்கணித்து பகிஷ்கரிக்குமாறு வேண்டுகிறோம்.

இலங்கையின் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தை தரவில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் அரச கூட்டுறவு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்கள், கல்விக்கூடங்கள், வர்த்தகநிலையங்கள் போன்றவற்றில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் உங்கள் உணர்வலைகளை வெளிப்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது.

இதேவேளை தமிழ்மாணவர் ஒன்றிய தலைவர் ப.குணேந்திரன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலும் நாளை சுதந்திரதினத்தை கறுப்புநாளாக அனுஷ்டிக்குமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ப)

# மீன்பிடி உபகரணம் இன்று வழங்கல்

(மருதங்கேணி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மீனவக் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை கீயூமெடிக் நிறுவனம் வழங்கவுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறைமுனையில் உள்ள சென் தோமஸ் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் மீன்பிடிப்படகு வலை எஞ்சின் என்பன வழங்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் திணைக்களத் தலைவர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-35)

# வெளியே நின்றுகொண்டு கருத்துக்கூறாமல்...

பரிசீலனை செய்யப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி சுமார் இரண்டு. மணிநேரம் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகியவற்றின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பாதுகாப்பு படை உயரதிகாரிகள், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண புனர்நிர்மாண வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய சிரேஷ்ட உயரதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்துகொணடனர்.

கல்வி, சுகாதாரம், மீன்பிடி,. விவசாய நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதோடு, கடற்கரையோரத்தில் வீடுகள் புதிதாக அமைக்க அனுமதியளிக்கக்கூடாது என விசேட பணிப்புரை மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு விடுக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை பாடசாலைகளிலிருந்து வெளியேற்றி தற்காலிக கூடாரங்களில் தங்கவைப்பதற்கு தற்காலிக கூடாரங்கள் தேவைப்படுவதாக அரசாங்க அதிபர்கள் ஆளுநருடைய கவனத்திற்கு கொண்டுவந்தபோது அவற்றை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு முத்திரைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உதவி வழங்குவதற்கு தேவைப்படும் வாகனங்களில் சில அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஏனையவை அடுத்த வாரத்தில் அனுப்பிவைக்கப்படும் என ஆளுநர் கூறினார். ஆழிப்பேரலை வேலைத்திட்டங்கள் துரிதமாக நடைபெறவேண்டும். தேவைப்படும் விடயங்கள் குறித்து உடனுக்குடன் அறிவிக்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளாதது குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்டபோது ஆளுநர் பதிலளிக்கையில்,

வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிலிருந்து கருத்துகூறுவதிலும் பார்க்க, இன்றைய சந்திப்பில் பங்கேற்று தமது மக்களுடைய தேவைகளை உரிமையோடு கேட்கமுடியும்.

அதனை விடுத்து வெளியே நின்றுகொண்டு அரசு எதனையும் செய்யவில்லை எனக் கூறுவதனை எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது. அரசு வன்னிக்கு தேவையானவற்றை அனுப்பிவைத்துள்ளது. மேலும் அனுப்பிவைக்கவுள்ளது எனவும் ஆளுநர் தெரிவித்தார். (த)

## பில்கிளின்ரன்...

இதற்கான அறிவித்தலை ஐ.நா. செயலர் கொபிஅனான் பில்கிளின்ரனுக்கு விடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, இந்தோனேசியா ஆகிய இரு நாடுகளையுமே கிளின்ரன் அவதானிப்பார்.

சுனாமிஅனர்த்த நிவாரணப்பணி தொடர்பாக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள இழுபறிநிலைக்கு தீர்வுகாண பில்கிளின்ரனின் பணி உதவவேண்டுமென கொபிஅனான் விரும்புவதாக ஐ.நா.சபையை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச)

## பாப்பரசர்...

காரணமாக பாப்பரசர் ரோமிலுள்ள வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார்.

பாப்பரசர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் அவர் கலந்துகொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளன. (த-08)

# ‘சுனாமி 81ஐ’ அடையாளம் காண...

மாலை கல்முனை பகுதியில் அநாதரவான நிலையில் எஸ்.சிறீஸ்கந்தராஜா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எஸ்.அழகையா என்பவர் ஊடாக இந்தக் குழந்தை கல்முனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இந்தக் குழந்தைக்கு பல பெற்றோர்கள் தமது குழந்தை என வைத்தியசாலை நிர்வாகத்திடம் உரிமை கோரியிருந்தனர்.

இருப்பினும் கல்முனையைச் சேர்ந்த ஜெயராஜா - ஜூனித்தா தம்பதிகள் இந்த குழந்தை தங்களுடைய குழந்தை அபிலாஸ எனக்கூறி கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாகல் செய்தனர்.

கடந்த 12 ஆம் இந்த மனுமீதான விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றபோது குறிப்பிட்ட தம்பதிகளிடம் பராமரிப்பிற்காக குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்தது.

வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் கே.முருகானந்தம், மகப்பேற்று வைத்திய நிபுணர் எம்.முகுந்தன் ஆகியோர் நீதிபதியைச் சந்தித்து குழந்தையின் உடல் ஆரோக்கியம் கருதி தொடர்ந்து வைத்தியசாலைப் பராமரிப்பில் வைப்பதற்கு அனுமதி கேட்டனர். இதனையடுத்து குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலை பராமரிப்பில் இருந்துவருகிறது.

நேற்று கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.பி.முகைதீன் முன்னிலையில் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே உரிமை கோருபவர்களையும், குழந்தையையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலமே பெற்றோரை அடையாளம் காணமுடியுமென தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி குழந்தையையும் அதற்கு உரிமைகோரும் பெற்றோரையும் மரபணு பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

எதிர்காலத்தில் யாராவது உரிமைகோரினால் அவர்களையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். அதுவரை குழந்தை வைத்தியசாலை பராமரிப்பில் இருக்கவேண்டும்.

உரிமைகோரும் பெற்றோர் வைத்தியசாலை சட்டதிட்டத்திற்கு அமையப் பார்வையிடமுடியும் என்றும், தனது உத்தரவில் குறிப்பிட்டு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதற்கிடையில் குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலை பராமரிப்பில் இருக்கவேண்டும் என நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, ஆத்திரமடைந்த உரிமைகோரும் தம்பதிகளும் அவர்களது உறவினர்களும் நீதிமன்றத்திற்கு வெளியே வந்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பினார்கள்.

அங்கிருந்து நேரடியாக வைத்திசாலைக்குள் அத்துமீறி நுழைந்து குழந்தையை எடுத்துச்செல்ல முற்பட்டார்கள். இதனால் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக வைத்தியசாலை அலுவல்கள் ஓரிரு மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டு அனைவரும் வெளியேற்றப்பட்டனர். (த)

## நடேசனுடன்...

டைஸ்சபா ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சந்திப்பில் காவல்துறையினருடன் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாகவும், மனிதஉரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## வகுப்பறைக்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வழமைபோல சம்பவநேரம், சம்பந்தப்பட்ட வகுப்பறையில் 5ஆம், 3ஆம் தர மாணவருக்கான வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தவேளை திடீரென அவ் வகுப்பின் தூண்கள் ஆட்டம் காண வகுப்பறையின் கூரை பொறிந்து மாணவர்கள் மீது வீழ்ந்தது. இதில் அகப்பட்ட மாணவர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடினர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக வைததியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இதேவேளை மேற்படி வகுப்பறை சுமார் 100 வருடங்களுக்கு முற்பட்டது எனத் தெரிவித்த அப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர், இப் பாடசாலை வகுப்பறையின் கட்டடத் தொகுதி முற்றாகவே உடைந்துள்ளதுடன் விழக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். (ப)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.